647

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE LAY PUBLIC

"வக்கீல்"

647/ம

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2[illegible] NOV 1951
MADRAS

இந்த இதழில்

சென்னை
ஜாகை - வாடகை
கட்டுப்பாடு சட்டம்
(ரெண்ட் கண்ட்ரோல் ஆக்ட்)
புதிய திருத்தங்கள்
உள்பட

விற்பனைவரி
சட்டத்திருத்தம்

1951—52 வருமானவரி

இரும்பு கண்ட்ரோல்

ரைஸ்மில் கண்ட்ரோல்

ஜவுளி வியாபாரி வழக்கு

கேள்வி—பதில்

விபரம் உள்ளே பார்க்கவும்

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

1715

THE "VAKIL" — ஜூன்-1951 — 4 அணா

கல்யாண
பட்டு நூல்
ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க்
எம்போரியம்

★

119, பெரியதெரு. :: கும்பகோணம்.
போன் நெ. 83

கல்யாண காலத்துக்கேற்ற
ஜரிகை கலந்த
பட்டுச் சேலைகள் &
நூல் ஜவுளிகள்
உங்கள் மனதிற்கு உகந்த
தினுசுகள் கிடைக்குமிடம்

கொள்ளேகால்
ஸில்க் ஹவுஸ்

பெரிய தெரு. :: கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1942

தந்தி "லலிதாலய"

உயர்தர ஆயுர்வேத சிகிச்சைக்கும்
மருந்துக்கும்

லலிதா பார்மஸி
ஆயுர்வேத வைத்தியசாலை
கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ்
49, மூர்த்தி செட்டித் தெரு.

பிராஞ்ச
73, பக்தபுரி அக்ரஹாரம்.

விசேஷ தயாரிப்பு
நரம்பு தளர்ச்சிக்கு "யௌவநீ"

ஆடைகளை வெண்மை பெறச் செய்வது

V.V SOAP
V.V.SOAP WORKS.KM.

தயாரிப்பவர்:—
V. V. சோப் ஒர்க்ஸ்,
ஸ்ரீ சக்கிரபாணி கோவில் ஸன்னதி,
கும்பகோணம்.

ESTD. 1947 TEL: "FINANCIAL"

The Mayavaram Financial Corporation Ltd.
REGISTERED OFFICE: GANDIJI ROAD.
Post Box 18, MAYURAM.

Loans can be arranged on easy Terms.
Monthly subscription of Rs. 12-8-0 in 40 months, make the subscribers have a huge profit of Rs. 75, with the subscribed amount of Rs. 500 during the chit.
In the middle of the chit, facilities for loans either by auction or by thavanai system are provided in the scheme. Apply for particulars with Annas Four Postage Stamp.

(By order of the Board.)
R. KALYANASUNDARAM,
MANAGING DIRECTOR.

"வக்கீல்"

போதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன, B A, B L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு B A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A, B. L.,
,, V. S விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

"வக்கீல்" சந்தா விபரம்

வருட சந்நா அதாவது 12 இதழ்களுக்கு மட்டில்	ரூ. 3—0—0
விசேஷ வருட சந்தா [12 இதழ்களுக்கும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்களுக்குமாக]	ரூ. 6—0—0
ஷெ வெளிநாடு	ரூ. 10—0—0

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் மட்டில் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 "வக்கீல்" மாத இதழ்களும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும். ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சாதாரணமாய் வி. பி. பி. கிடையாது.

2. சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 :: கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

3. மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

4. சிலோன் நேயர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பும்படி எழுதி ரூ. 6—7—0 செலுத்தி விசேஷ வருட சந்தாதார்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

5. வெளிநாட்டிலிருந்து சந்தா தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பலாம்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 ஜூன் 1951 இதழ் 6

பொருள் அடக்கம்

	பக்கம்
குறிப்புகளும் - செய்திகளும்	3
புதிய சட்டங்கள் சுருக்கியும் - வரிசையாகவும்	4
விற்பனை வரி திருத்தச் சட்டம்	5
1951-52 வருமான வரி	8
ஜாகை - வாடகை கட்டுப்பாடு சட்டம் புதிய திருத்தங்கள் உள்பட	9
வழக்கும் - தீர்ப்பும்	
* ஜவுளி வியாபாரி கண்ட்ரோல் வழக்கு	19
* பஸ் கண்டக்டர் டிக்கட் கொடுக்கா விட்டால்	20
* ரயிலில் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்தால்	20
கேள்வி - பதில்	21
கண்ட்ரோல்	23

"வக்கீல்" பிரசுரங்கள் (நெ. 3) "விற்பனைவரி" புதிய திருத்தங்கள் உள்பட அச்சிலிருக்கிறது. பிரசுரமாகும் தேதியை எதிர்பாருங்கள். விலை ரூ 2. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"

1 மண்டலம் (48 நாள்)

பூஜை செய்தும்

ஆயுள் பூராவும் பலன் தரும்

வெள்ளி ரக்ஷை

ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். ஷை தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. **(1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3)** *V. P.* **கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.**

கோட்டமருதூர்,

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,

ஆகண்டநல்லூர் *P. O. (S. A. Dt.)*

"சக்தி ஆரூடம்"!

ஸ்ரீ K. R. அப்பளாச்சாரியார் M.A.L.T. வைஸ் பிரின்சிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.

"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

1 to 3 ஆரூட கேள்விகளுக்கு ரூ. 1.

3-க்கு மேல் கேள்வி 1க்கு அணா 8.

1 வருட பலன் ரூ. 5.

ஜாதகம் கணிக்க ரூ. 2.

சக்தி கவசம் ரூ. 7—8—0.

வி. பி. பி. தனி.

ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.

N. B:—**வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.**

சக்தி ஹோம்,

விருத்தாசலம் P.O. (S.I.)

"எலிக்ஸிர் அஸ்வகந்தா"

மகரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி வயிறு, முதுகு, இடுப்பு வலிகள் ஒழித்து நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது **"எலிக்ஸிர் அஸ்வகந்தா"**வே.

40 தோலா கொண்ட டின் ரூ. 10

தபால் செலவு பிரத்தியேகம்

ஆயுர்வேத வைத்தியர்

T. V. ஜெயராம சாஸ்திரிகள்,

வீரராகவ வைத்திய சாலா,

ஸ்ரீரங்கம் P. O. S. I.

தபால் மூலம் இலவசக்கல்வி

1. 1952 தமிழ்ப்புலவர் புகுமுகத் தேர்வு.

2. E. S. L. C. **ஆங்கிலமும் உண்டு.**

3. இந்தித் தேர்வுகள் (1951 ஆகஸ்டு) பாடங்கள் அச்சிட்டவை. **பிரகடனம் விண்ணப்பத்திற்கு 2 அணா தபால் பில்லை அனுப்பவும்.**

பாரதி கலைக் கோயில்

ரிஷி வந்தியம், P. O.

(Via) **திருக்கோயிலூர்,** S. I. Ry.

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

அன்னகிளி

சோப்

தயாரிப்பவர்:—

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38

தஞ்சாவூர்.

"வக்கீல் பிரசுரங்கள்"

பிரசுரமானவை:—

1.	தொழிற்சாலைச் சட்டமும்—விதிகளும் நமூனா 20-படி சுருக்கம் (பிரதிகள் ஜாடாவும் செலவாகி விட்டன)	ரூ. 0—8—0
2.	ஷாப் சட்டம்	ரூ. 1—8—0

அச்சிலிருப்பவை:—

3.	விற்பனை வரி	ரூ. 2—0—0
4.	விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் (புதிய ஒத்தி திருத்தம் உள்பட)	ரூ. 0—12—0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

மற்ற முக்கிய பிரசுரங்களை எதிர்பார்க்கவும்!

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்

தபால் பெட்டி 26, கும்பகோணம்

(தென் இந்தியா)

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 3 | ஜூன் 1951 | இதழ் 6

குறிப்புகளும் - செய்திகளும்

சிங்கத்தின் கர்ஜனை: நீங்கள் ஒரு ரூபாய் ஒருவரிடம் கடனாக வாங்கிக்கொண்டால் பாதகமில்லை; ஆனால் அவரிடம் இனாமாக அந்த ரூபாயை வாங்கிக்கொண்டு விட்டீர்களானால் — மோசம் போனீர்கள்! நீங்கள் அவருடைய அடிமையாகிவிடுகின்றீர்கள். உங்களுக்கு இனாம் கொடுத்ததாகச் சொல்லும் அவர் உங்களிடமிருந்து பல ரூபாய்கள் மதிப்புள்ள பிரதிப் பிரயோஜனத்தை அடைந்து விடுவார்! இது தனி மனிதனுடைய சுபாவமென்று மட்டில் நினைக்காதீர்கள். ஒரு பெரிய ஜனத்திரளுக்கே இவ்வித அற்ப புத்தி இருக்கக்கூடுமென்பதை அமெரிக்கர்கள் காண்பித்து வருகின்றனர். இந்தியாவுக்கு உணவு தானியம் கொடுத்து உதவி செய்யப்போவதாக பறைசாற்றிக்கொள்ளும் அமெரிக்கர், பாதி தானியத்தைக் கடனாகவும் பாதி தானியத்தை இனாமாகவும் கொடுக்கத் திட்டம் போடுகின்றனர். ஆனால் இனாமாகக் கொடுக்கும் பாதி சம்பந்தப்பட்டவரையில் நமது சுயமரியாதைக்குப் பங்கம் வரும் விதம் நிபந்தனைகள் கேட்க தங்களுக்குள்ளேயே பேசிக்கொள்ளுகின்றனர்! இதைக் கேட்ட இந்தியச் சிங்கம் கொடுத்த ஓர் கர்ஜனை அமெரிக்காவையே ஸ்தம்பிக்கச் செய்தது. வீரஜவஹர் வாழ்க! வீரர்களைப் பெற்ற பாரத சமுதாயம் வாழ்க!

* * * *

சென்னை ஜீவபலித் தடைச்சட்டம். 1—6—1951 முதல் அமுல். கோயில் டிரஸ்டிகளும், பூசாரிகளும், உஷார்! சென்னைச் சட்ட சபையால் நிறைவேற்றப்பட்ட சென்னை ஜீவபலித்தடைச் சட்டம் 1-6-1951 முதல் அமுலுக்கு வரும் என்று சென்னைச் சர்க்காரால் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இச்சட்டம் "வக்கீல்" 1951—பிப்ரவரி இதழ் பக்கம் 6-ல் விவரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. சுருக்கமாக இச்சட்டத்தின் ஷரத்துக்களாவன:—ஹிந்து கோயில்களுக்குள்ளோ, அருகிலோ தேரடியிலோ எவரும் தெய்வத்திற்குப் படைக்கும் எண்ணத்துடன் எவ்விதமான மிருகங்களையும் பறவைகளையும் பலியிடுவதும், வெட்டி ஊனப்படுத்துவதும் இதற்கு உடந்தையாக இருப்பதும் இடம் தருவதும் குற்றமாக்கப்பட்டிருக்கிறது. ரூ. 300 வரை அபராதம் விதிக்கப்படலாம். குற்றம் செய்பவர் கோயில் உத்தியோகஸ்தர், டிரஸ்டி, சிப்பந்தி, பூசாரி இவர்களாக இருந்தால் 3 மாதம்வரை சிறைத் தண்டனையும் விதிக்கப்படலாம்.

* * * *

புதுக்கோட்டை "ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்டிரிக்ட்" அமைப்பு:—1-6-1951 முதல் 'புதுக்கோட்டை ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்டிரிக்ட்' என்று புதிதாக அமைக்க சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். இப்பொழுது திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த ஆலங்குடி, அன்னவாசல், கரம்பக்குடி, கீழநிலை, குளத்தூர், பெருங்களூர், பொன்னமராவதி, புதுக்கோட்டை, திருமயம், விராலிமலை, ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த தேவகோட்டை, திருப்பத்தூர், காரைக்குடி, சிங்கம்புணரி, சிவகங்கை, காளையார்கோயில், [illegible]வதானி, தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த அறந்தாங்கி, மணமேல்குடி இந்த சப்ரிஜிஸ்டர் ஆபீசுகள் 1-6-1951 முதல் புதுக்கோட்டை ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்டிரிக்டைச் சேர்ந்தவையாகும்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

1951-ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச்சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டவை. சட்டம் சென்னை - சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

2. கட்டாய நிலச்சுவாதீன அதிகாரத் திருத்தச் சட்டம். (29-3-1951) ராஜ்ய சர்க்காரால் 1947-ஆம் வருடத்திய மத்திய சட்டத்தின்படி சுவாதீனம் எடுத்துக்கொள்ளப் பட்ட சொத்துக்கள் சம்பந்தப்பட்டவரை அச் சட்டம் 1-4-1952 வரை அமுலில் இருக்கும் என்பது.

3. சென்னை அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம். (31-3 1951) 1-4-1950 முதல் ஆரம்பமான வருடத்திற்கு ராஜ்ய்ப்பொது நிதியிலிருந்து இன்னும் ரூ. 22,37,82,500 செலவு செய்ய, சென்னைச் சர்க்காரை அனுமதிக்கும் சட்டம்.

4. சென்னை அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம். (31-3-1951) 1-4 1951 முதல் ஆரம்பமாகும் நிதி வருடத்தில் ராஜ்யப் பொது நிதியிலிருந்து ரூ. 1,26,52,08,100 செலவு செய்ய, சென்னைச் சர்க்காரை அனுமதிக்கும் சட்டம்.

5. சென்னைப் பொது விற்பனைவரி திருத்தச் சட்டம். Madras General Sales Tax Amendment Act, 1951 (20-4-1951). விற்பனைவரி அப்பீல்களை விசாரிக்க ஒரு பிரத்தியேக 'டிரிபுனல்' என்ற கோர்ட் ஏற்படுத்தவும் இன்னும் அச்சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யவும் இச்சட்டம். இச் சட்டம் விவரமாய் இந்த இதழில் விளக்கப்பட்டிருக்கிறது.

6. சென்னை ஜமீன் — இனும் வாரக் குறைப்புத் திருத்தச் சட்டம. Madras Estates Land - Reduction of Rent — Amendment Act, 1951. (24-4-1951) 1947-ஆம் வருடத்திய 'எஸ்டேட்' நிலங்களின் வாரக்குறைப்புச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. முக்கியமாக:—(1) வாரக்குறைப்பு ஏற்பட்டு, கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட ஜமீன் இனும் கிராம ரயத்துக்கள் 1357-ஆம் பசலி முதல் கொடுக்கவேண்டிய மேல்வாரத்தை வசூல் செய்யச் சர்க்காருக்குத தான் உரிமை என்றும், ஜமீன்தாருக்கோ இனும் தாருக்கோ மேற்கண்ட மேல் வாரத்தை வசூல் செய்ய உரிமை இல்லை என்றும் இத்திருத்தச் சட்டத்தால் தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது. (2) மேலும் இவ்விதம் வாரக்குறைப்புச் செய்யப்பட்ட பிறகு ரயத்துக்கள் கொடுக்க வேண்டிய மேல் வாரத்தைச் சர்க்காரே கிஸ்தி வசூல் செய்வது போல் செடுக்களாக வசூல் செய்வார்கள். ஷை நிலங்களுக்கு 'எஸ்டேட் லாண்ட்' சட்டத்தின் 5, 6-ஆம அத்தியாயங்கள் இனி பொருந்தா. (3) இச்சட்டப்படி ரயத்துக்கள் சர்க்காரிடம் கொடுக்கவேண்டியமேல் வாரத்தொகை கொடுபடாமலிருந்தால் அடுத்த பசலி ஆரம்பம் முதல் (அதவாது அடுத்த ஜூலை மாதம் 1ஆம் தேதி முதல்) வருடம் 1-க்கு ரூ. 100-க்கு ரூ. 6-0-0 வீதம் வட்டி சேர்த்து, சர்க்கார் வசூல் செய்வார்கள். பழைய பாக்கிகளுக்கும் வாரக்குறைப்பு, கெஜட்டில் பிரசுரமான பசலிக்கு அடுத்த பசலி ஆரம்பம் முதல் மேற்கண்டபடி வட்டி உண்டு. (4) ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத்தால் ஒரு கிராமம் திறப்பு நிலமாக மாற்றககூடியதாக இருந்தாலும, இல்லாவிட்டாலும், எல்லாவித 'எஸ்டேட்' நிலங்களுக்கும் இந்த வாரக்குறைப்புச் சட்டம் உண்டென்று வியக்தயாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (5) வாரக்குறைப்பு ஏற்பட்ட நிலங்களுக்கு 1357-ஆம் பசலி முதல் கொடுக்கப் படவேண்டிய மேல் வாரத்தை வசூல் செய்ய ஜமீன்தாரோ இனும்தாரோ ஏதாவது தாவா செய்திருந்தால் அத்தாவாக்கள் தள்ளப்பட்டு விடும். மேற்கண்ட மேல்வாரம் சம்பந்தமாக இத்திருத்தச் சட்டத்திற்கு முன்பே டிக்ரி ஏற்பட்டிருந்தாலும், அதனால் பாதிக்கப்பட்டவர் கோர்ட்டுக்கு மனுப்போட்டால், 1357 ஆம் பசலி முதல் உள்ள மேல்வாரம் சம்பந்தப்பட்ட வரையில், டிக்ரி ரத்து செய்யப்படும்.

7. ஜாகை — வாடகை கட்டுப்பாடு திருத்தச் சட்டம். Madras Buildings — Lease and Rent Control—Amendment Act, 1951 (1-5-1951). சென்னை ஜாகை - வாடகை கட்டுப்பாடு சட்டத்தில் (ரெண்ட் கண்ட்ரோல் சட்டத்தில்) பல முக்கிய மாறுதல்களும் திருத்தங்களும் இச்சட்டத்தால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இச்சட்டம் இந்த இதழில் விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது.

விற்பனை வரி திருத்தச் சட்டம் (1951)

[Madras General Sales Tax Amendment Act, 1951. சென்னை 1939-ஆம் வருடத்திய பொது விற்பனை வரிச் சட்டத்தில் இப்பொழுது சில முக்கிய மாறுதல்களும் திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. இத் திருத்தச் சட்டம் 1951-ஆம் வருடத்திய 6 ஆவது (சென்னை) சட்டம். இது சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, 15-4-1951ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று, 20-4-1951 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. 15-5-1951 முதல் அமுலுக்கு வந்துவிட்டது.]

முகவுரை :—சென்னை விற்பனை வரிச் சட்டப்படி ஒரு வியாபாரிக்கு முதலெடுப்பில் வரி விதிக்க அதிகாரமுள்ள அதிகாரிகள் இருவர்தான். ஒரு வருடத்தில் மொத்த வியாபாரம் ரூ. 20,000-க்கு மேற்படாத வியாபாரிகளுக்கு அசிஸ்டெண்ட் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் (எ. சி. டி. ஒ—A. C. T. O) என்ற அதிகாரி வரி விதிப்பார். ரூ. 20,000-க்கு மேல் மொத்த வியாபாரமுள்ளவர்களுக்கும் பல இடங்களில் வியாபாரம் செய்பவர்களுக்கும், டிப்டி கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் (டி. சி. டி. ஒ.—D. C. T. O.) என்ற அதிகாரி வரி விதிப்பார்.

இவர்கள் செய்த வரி விதிப்பு அல்லது லைசென்சு சம்பந்தமான உத்தரவின் பேரில், உத்தரவு கிடைத்த 30 நாட்களுக்குள், அந்த ஜில்லாவின் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் (சி. டி. ஒ.—C. T. O.) என்ற ஜில்லா அதிகாரிக்கு அப்பீல் செய்யலாம்.

இம் மூன்று அதிகாரிகளின் உத்திரவுகளை பரிசீலனை (Revision) செய்யும் விஷயமாக ஏற்கனவே இருந்த செக்ஷன் 12 என்பது இத் திருத்தச் சட்டத்தால் மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக செக்ஷன் 12, 12A; 12B; 12C; 12D என்ற 5 செக்ஷன்கள் புதிதாக விற்பனை வரிச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் முக்கிய அம்சங்கள் :—

பரிசீலனை (Revision) செய்யக்கூடிய அதிகாரிகள். செக்ஷன் 12.

(1) சி. டி. ஒ. (C. T. O.) கமர்சியல் டாக்ஸ் ஆபீசர் என்ற இந்த ஜில்லா அதிகாரி அவருக்குட்பட்ட மேற்கண்ட இரண்டு அதிகாரிகளால் செய்யப்பட்ட எந்த உத்தரவையும் தாமாகவே (Suo motu) வரவழைத்து, அது சட்டப்படி இருக்கின்றதா, சரியாகவும் முறைப்படிக்கும் ஏற்பட்டிருக்கிறதா என்று 'பரிசீலனை' செய்துபார்த்து, தமக்கு யுக்தமாகத் தோன்றும் விதம் உத்தரவிடலாம். இதற்குத் தான் 'பரிசீலனை' Revision—என்று பெயர். இவ்விதம் சி. டி. ஒ. தாமாகப் பரிசீலனை செய்யாவிட்டால்கூட, இந்த அதிகாரத்தை உபயோகிக்கும்படி, பாதிக்கப்பட்டவர் (அப்பீல் செய்ய உரிமை இல்லாவிட்டால்) கீழ் அதிகாரியின் உத்தரவு பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று சி. டி. ஒ. வுக்கு மனுவும் போடலாம்.

2. டிப்டி கமிஷனர்: இவர் சி. டி. ஒ. வுக்கும் மேல் அதிகாரி. பல ஜில்லாக்களுக்கும் சேர்த்து, ஒரு 'டிப்டி கமிஷனர்' இருப்பார். இவர், தாமாகவே, தமக்குட்பட்ட மேலேகண்ட மூன்று வகை அதிகாரிகள் செய்யும் எவ்வித உத்தரவுகளையும் வரவழைத்து மேற்கண்டபடி அவைகளைப் பரிசீலனை செய்யலாம். சி. டி. ஒ. செய்த உத்தரவின் பேரில் 'அப்பீல் டிரிபுனலு'க்குக் கீழே கண்டபடி அப்பீல் செய்யாதவர்கள், இவருக்குப் பரிசீலனை மனுக் கொடுக்கலாம்.

(3) ரிவன்யூ போர்டு: எல்லா விற்பனை வரி அதிகாரிகளுக்கும் மேற்பட்டது ரிவன்யூ போர்டு என்ற சபை. ரிவன்யூ போர்டுக்கும் விற்பனை வரி சம்பந்தமாய்ப் பரிசீலனை அதிகாரம் உண்டு. இவர்களும், தாமாகவே எந்த விற்பனை வரி அதிகாரியின் எவ்வித உத்தரவுகளையும் வரவழைத்து மேற்கண்டபடி அவைகளைப் 'பரிசீலனை' செய்யலாம். டிப்டி கமிஷனர் செய்த உத்தரவின் பேரில், 'அப்பீல் டிரிபுனலு'க்குக் கீழ்க்கண்டபடி அப்பீல் செய்யாதவர்கள் ரிவன்யூ போர்டுக்குப் பரிசீலனை மனுக் கொடுக்கலாம்.

பரிசீலனை செய்யக் காலாவதி: மேற்கண்டபடி பாதிக்கப்பட்டவர் கொடுக்கக்கூடிய பரிசீலனை மனுக்கள் கீழ் அதிகாரியின் உத்தரவு கிடைத்த 60 தினங்களுக்குள் கொடுக்க வேண்டும்; அதற்குப் பிறகும் தாமதத்திற்குத் தகுந்த காரணங்கள் காட்டினால் பரிசீலனை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படலாம். மனு இல்லாமல் தாமாகவே பரிசீலனை செய்வதாக இருந்தால் சி. டி. ஓ. 3 வருடங்களுக்குள்ளும், டிப்டி கமிஷனரும், ரிவன்யூ போர்டும் 4 வருடங்களுக்குள்ளும் 'பரிசீலனை' செய்யும் அதிகாரத்தை உபயோகிக்கலாம். வரி விதிக்கப்பட்டவருக்கு உத்தரவு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து மேற்கண்ட கெடுக் கணக்கு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட அதிகாரிகள், பரிசீலனை செய்வதில் ஒரு வியாபாரிக்கு விதிக்கப்பட்ட வரியை உயர்த்துவதானால், அவருடைய கட்சியைக் கேட்க அவருக்குச் சந்தர்ப்பமளித்த பின்புதான் உயர்த்தலாம்.

"அப்பீல் டிரிபுனல்" செக்ஷன் 12 A.

விற்பனை வரி சம்பந்தமான அப்பீல்களை விசாரிக்க, "அப்பீல் டிரிபுனல்" (Appellate Tribunal) என்ற ஒரு பிரத்தியேக நியாய சபை அல்லது கோர்ட்டு ஏற்படுத்தப்படும். விற்பனை வரிச் சட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்ட செக்ஷன் 2 A யின்படி இந்த அப்பீல் டிரிபுனல் மூன்று அங்கத்தினர்களைக் கொண்டதாகும். அவர்களை ராஜ்ய சர்க்காரே நியமிப்பார்கள். அவர்களில் ஒருவர் அக்கிராசனர். (Chairman). இவர் ஜில்லா ஜட்ஜ் அந்தஸ்துக்குக் குறையாதவராக இருப்பார். மற்ற இரண்டு அங்கத்தினர்களின் யோக்கியதாம்சங்கள் எவ்விதம் இருக்கவேண்டுமென்று விதிகள் ஏற்படும்.

சி. டி. ஓ. வின் வரி விதிப்புப் பற்றிய எவ்வித உத்தரவின் பேரிலும் 'அப்பீல் டிரிபுன'லுக்கு நேராக அப்பீல் செய்யலாம். ஆனால் சி. டி. ஓ. வின் உத்தரவைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று டிப்டி கமர்சியல் ஆபீசருக்கு மனுக் கொடுத்தவர்கள் 'அப்பீல் டிரிபுன'லுக்கு அப்பீல் செய்யமுடியாது. மேலும் டிப்டி கமிஷனர் யாதொரு மனுவுமில்லாமல் தாமாகவே முன் சொன்னபடி கீழ் அதிகாரியின் உத்தரவைப் பரிசீலனை செய்து ஓர் உத்தரவு போட்டிருந்தால், அவ்வுத்தரவின் பேரிலும் 'அப்பீல் டிரிபுன'லுக்கு அப்பீல் செய்யலாம். ஆனால் டிப்டி கமிஷனருடைய உத்தரவைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று ரிவன்யூ போர்டுக்குப் பரிசீலனை மனுப் போடுபவர்கள் அப்பீல் டிரிபுனலுக்கு அப்பீல் செய்ய முடியாது.

அப்பீல் செய்யப்படவேண்டிய உத்தரவு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து, 60 நாட்களுக்குள் அப்பீல் டிரிபுனலுக்கு அப்பீல் தாகல் செய்யப்படவேண்டும். 60 நாட்களுக்குப்பின் தாகல் செய்யப்படும் அப்பீல்களையும், தகுந்த காரணங்கள் இருந்தால், ஏற்றுக்கொள்ள அப்பீல் டிரிபுனலுக்கு அதிகாரமுண்டு. அப்பீல் எவ்விதம் எழுதப்படவேண்டும், அதற்கு உறுதி மொழி எவ்விதம் இருக்கவேண்டும், எவ்வளவு ஸ்டாம்பு கட்டவேண்டும் என்றும் விதிகள் ஏற்படும். ஸ்டாம்பு ரூ. 100-க்குமேல் இருக்காது. அப்பீல் டிரிபுனல் வரி விதிக்கப்பட்டவருக்கும், வரி விதித்த அதிகாரிக்கும் நோட்டீஸ் அனுப்பி, இருதரப்பினருடைய கட்சிகளையும் கேட்கச் சந்தர்ப்பமளித்து, பிறகு தீர்ப்புச் சொல்வார்கள். அப்பீல் செய்தாலும் அப்பீல் செய்பவர் கொடுக்க வேண்டியதாக விதிக்கப்பட்டிருக்கும் வரியைக் கட்டிவிட வேண்டும். 'அப்பீல் டிரிபுன'லால் தீர்ப்பு சொல்லப்பட்ட பிறகும் கூட, டிரிபுனல் முன்பு பிரஸ்தாபிக்கப்படாத புதிய விஷயங்கள் தெரியவந்து அவ்விஷயங்களையும் ஆராய்ந்து டிரிபுனல் புனர் ஆலோசனை (Review) செய்யவேண்டுமென்று ஒரு வருடத்திற்குள் மனுக் கொடுக்கலாம். இவ்வித புனர் ஆலோசனை மனுவை, வரி விதிக்கப்பட்டவரும் தாகல் செய்யலாம்; விற்பனை வரி டிப்டி கமிஷனரும் தாகல் செய்யலாம். வரி விதிக்கப்பட்டவர் செய்யும் புனராலோசனை மனுவுக்கு மட்டில் ரூ. 100-க்கு மேற்படாத ஸ்டாம்பு கட்டணம் கட்டும்படி விதிகள் ஏற்படும்.

ஹைகோர்ட்டால் 'பரிசீலனை'. செக்ஷன் 12 B:—'அப்பீல் டிரிபுனல்' சட்ட விஷயங்களில் தவறாக முடிவு செய்துவிட்டது என்ற

காரணத்தினாலாவது, அல்லது சட்ட பிரச்னையை முடிவு செய்யத் தவறிவிட்டதென்ற காரணத்தினாலாவது, அத்தீர்ப்பை பரிசீலனை (Revision) செய்யவேண்டுமென்று ஹைகோர்ட்டுக்குப் பாதிக்கப்பட்டவர் 'ரிவிஷன்' மனுக் கொடுக்கலாம். வரி விதிக்கப்பட்டவரும் இவ்வித மனுக் கொடுக்கலாம்; விற்பனை வரி இலாகாவுக்காக டிப்டி கமிஷனரும் இவ்வித மனுக் கொடுக்கலாம். ஹைகோர்ட்டுக்குக் கொடுக்கப்படும் 'ரிவிஷன்' மனுவும் டிரிபுனல் தீர்ப்புத் தெரிவிக்கப்பட்ட 60 தினங்களுக்குள் கொடுக்கப்படவேண்டும்; தகுந்த காரணங்கள் காண்பிக்கப்பட்டால் அதற்குப் பிறகு கொடுக்கப்படும் மனுக்களையும் ஹைகோர்ட் ஏற்றுக்கொள்ளலாம். ரிவிஷன் மனு எவ்விதம் இருக்கவேண்டுமென்றும், இதற்கு ஸ்டாம்புக் கட்டணம் எவ்வளவு என்றும் விதிகள் ஏற்படும். இதற்கும் ஸ்டாம்பு ரூ. 100-க்குமேல் இருக்காது. 'டிரிபுன'லின் தீர்ப்பை மாற்றப் போதுமான காரணங்கள் இல்லை என்று தோன்றினல், மனுக் கொடுத்தவரை மட்டில் கேட்டு, மனுவை மேல் விசாரிக்காமல் உடனடியாக (Summarily)த் தள்ளிவிட ஹைகோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. அவ்விதம் மனுவைத் தள்ளாவிட்டால் இருதரப்புக்கும் நோட்டீஸ் அனுப்பி, அவர்களுடைய கட்சிகளைக் கேட்டு, அவ்வழக்கில் ஏற்படும் சட்ட பிரச்னையைப் பற்றி ஹைகோர்ட் முடிவு செய்வார்கள். ஹைகோர்ட்டில் ஏற்பட்ட தீர்ப்பையும் புனர் ஆலோசனை (Review) செய்ய மனுப் போடலாம். இது சம்பந்தமாய் விதிகள் ஏற்படுத்தப்படும். ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனு செய்தாலும் விதிக்கப்பட்ட வரியைக் கட்டிவிட வேண்டும்.

ஹைகோர்ட்டுக்கு நேரடியாக அப்பீல். செக்ஷன் 12 C:—ரிவன்யூ போர்டார் தாமாகவே (Suo motu) ஒரு விற்பனை வரி அதிகாரியால் செய்யப்பட்ட வரி விதிப்பு உத்தரவைப் பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பித்திருந்தால் அந்த உத்தரவின் மீது வரி விதிக்கப்பட்டவர் நேரடியாக ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். வரி விதிப்பு உத்தரவு கிடைத்த 60 நாட்களுக்குள் அப்பீல் செய்யவேண்டும். அப்பீலுக்கும் ஸ்டாம்பு எவ்வளவு என்று விதிகள் ஏற்படும். ரூ. 100-க்கு மேல் இருக்காது. முன் சொல்லப்பட்டது போல் அப்பீல் செய்தாலும் வரியைக் கட்டிவிட வேண்டும். அப்பீல் தீர்ப்பைப் புனர் ஆலோசனை செய்ய முன் சொல்லப்பட்டதுபோல் ஹைகோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

செக்ஷன் 12 D:—ஹைகோர்ட்டில் விற்பனை வரி அப்பீல்களையும் மனுக்களையும் குறைந்தது இரண்டு உயர் நீதிபதிகள் சேர்ந்து விசாரணை செய்யவேண்டும். வழக்கு முறைச் சட்டத்தின் (Civil Procedure Code) செக்ஷன் 98 படி நடவடிக்கைகள் நடத்தப்படும்.

சிவில் கோர்ட்டில் தாவா தடை செய்யப்பட்டுள்ளது. செக்ஷன் 18 A:— விற்பனை வரிச் சட்டத்தில் வியக்தமாய்க் குறிப்பிடப் பட்டிருக்கிறது தவிர, வரி விதிப்பை ரத்துச் செய்யவோ திருத்தவோ எவரும் சிவில் கோர்ட்டுகளில் தாவா செய்வது கூடாது என்று தடை செய்யப் பட்டிருக்கின்றனர்.

ஏற்கனவே தாகல் செய்யப்பட்ட பரிசீலனை மனுக்கள்:— இச் சட்டம் அமுலுக்கு வந்த 15-5-1951ல் டிப்டி கமிஷனரிடமோ, ரிவன்யூ போர்டிடமோ ஏற்கனவே தாகல் செய்யப்பட்டு முடிவடையாமல் 'பெண்டிங்'கில் இருக்கும் பரிசீலனை மனுக்கள், 30 தினங்கள் சென்ற பிறகு அப்பீல் டிரிபுனலுக்கு மாற்றப்படும். ஆனல் அந்த 30 தினங்களுக்குள் மனுதார் எழுத்து மூலம் ரிவன்யூ போர்டுக்கோ, டிப்டி கமிஷனருக்கோ, தம்முடைய மனுவை அப்பீல் டிரிபுனலுக்கு மாற்றவேண்டாம் என்று தெரிவித்துவிட்டால் அம்மனுவை டிப்டி கமிஷனரே, செக்ஷன் 12 (2)-ல் கண்ட விதம் பரிசீலனை செய்து முடிவு செய்வார்.

திருத்தச் சட்டத்தின் மற்ற அம்சங்கள்:—(1) ராஜ்ய சர்க்காரால் செய்யப்படும் விற்பனைகளுக்கும் விற்பனைவரிச் சட்டப்படி அவர்கள் விற்பனை வரி வசூல் செய்யலாமென்று

புதிதாக செக்ஷன் 8 C என்று சேர்க்கப் பட்டிருக்கிறது. (2) சி. டி. ஓ. வுக்கு அப்பீல் செய்ய 30 நாள் கெடு உண்டு. அதற்குப் பிறகு அப்பீல் தாகல் செய்யப்பட்டாலும், தகுந்த காரணங்கள் இருந்தால் அப்பீலை ஏற்றுக் கொள்ள சி. டி. ஓ. வுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதற்காக, செக்ஷன் 11-ல் சில வாசகம் சேர்க்கப்பட்டிருக்கிறது. (3) ஏற் கனவே ரிப்ரிஜிரேடர் ஏர் கண்டிஷன் பிளாண்ட் இவைகளுக்குச் சாதாரண விற்பனை வரியைத் தவிர ஒரு கட்டத்தில் ரூ. 1-க்கு 6 பைசா அதிக விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அவை சம்பந்தமான பாகங் களுக்கும் (Component parts) அதே அதிக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் ரேடியோ கிராமபோன்களுக்குச் சாதாரண வரியைத் தவிர ஒரு கட்டத்தில் ரூ. 1-க்கு 3 பைசா அதிக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அவை சம்பந்தமான பாகங் களுக்கும் அதே அதிக வரி விதிக்கப் பட்டிருக்கிறது.

1951–52 வருமானவரி (இன்கம்டாக்ஸ்) விகிதம்

[1951ஆம் வருடத்திய நிதிச் சட்டத்தால்-The Finance Act, 1951-விதிக்கப்பட்டுள்ளது.]

1951—52 வருடத்தில் வருமான வரி விகிதத்திலும், அமித வருமானவரி (சூபர் டாக்ஸ்) விகிதத்திலும் மாறுதல் இல்லை. ஆனால் கீழ்க்கண்ட விதிவிலக்குகளுக்குட்பட்டு மேற்படி வருமான வரியுடன் அதில் 20-ல் 1பங்கு (5%) 'சர்சார்ஜ்' (Surcharge) சேர்த்து 1951—52-ல் விதிக்கப்படும். முன் வருடத்தில் இருந்தது போலவே, ரூ. 7200க்கு மேற்படாத வருட வருமானமுள்ள பிரிபடாத இந்து குடும்பங்களுக்கு இவ்வருடமும் வருமான வரி கிடையாது. மேலும் இவ்வித குடும்பங்களுக்கு வருட வருமானம் ரூ. 14400க்கு மேற்படா திருந்தால் புதிய 'சர்சார்ஜ்' கிடையாது. மற்ற தனி நபர், கூட்டு வியாபாரம் செய்பவர்கள் முதலியவர்களுக்கும் முன் இருந்தது போலவே வருடவருமானம் ரூ. 3600க்கு மேற்படாதிருந் தால் இவ்வருடமும் வருமான வரி கிடையாது. இவர்களுடைய வருட வருமானம் ரூ. 7200க்கு மேற்படாதிருந்தால் இவர்களுக்கு புதிதாக விதிக்கப்படும் 'சர்சார்ஜ்'ம் கிடையாது.

1951—52 வருமானவரி விகிதம்.

மொத்த வருமானம்	வரிவிகிதம் ரூ. 1க்கு வரி	சர்சார்ஜ்
1. முதல் ரூ. 1500க்கு	வரி இல்லை..	இல்லை
2. அடுத்த ரூ. 3500க்கு	0-0-9	வரியில் 20ல் 1பங்கு
3. அடுத்த ரூ. 5000க்கு	0-1-9	....ஷை
4. அடுத்த ரூ. 5000க்கு	0-3-0	....ஷை
5. அதற்குமேல் உள்ள ஜாடா வருமானத்திற்கும்	0-4-0	....ஷை

1951—52 'சூபர்டாக்ஸ்' விகிதம்

மொத்த வருமானம்	சூபர்டாக்ஸ் விகிதம் ரூ. 1க்கு வரி	சர்சார்ஜ்
1. முதல் ரூ. 25,000க்கு	சூபர்டாக்ஸ் கிடையாது.....	இல்லை
2. அடுத்த ரூ. 15,000க்கு	0-3-0....	வரியில் 20ல் 1பங்கு
3. அடுத்த ரூ. 15,000க்கு	0-4-0.....	ஷை
4. அடுத்த ரூ. 15,000க்கு	0-6-0.....	ஷை
5. அடுத்த ரூ. 15,000க்கு	0-7-0.....	ஷை
6. அடுத்த ரூ. 15,000க்கு	0 7-6.....	ஷை
7. அடுத்த ரூ. 50,000க்கு	0-8 0.....	ஷை
8. அதற்குமேல் உள்ள ஜாடா தொகைக்கும்	0-8-6.....	ஷை

ஜாகை—வாடகை கட்டுப்பாடு சட்டம்

(1949)

(1951 ஆம் வருஷத்திய திருத்தச் சட்டம் உள்பட)

[1949 ஆம் வருடத்திய 25ஆவது சென்னைச் சட்டம் (The Madras Buildings Lease and Rent—Control Act 1949) 1951ஆம் வருடத்திய 8ஆவது சென்னைச் சட்டத்தால் பல முக்கிய விஷயங்களில் திருத்தம் செய்யப்பட்டது. இத் திருத்தச் சட்டம் 1—5—1951ல் அமுலுக்கு வந்தது. இத்திருத்தச் சட்டத்தால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் முக்கிய மாறுதல்கள்:—

1. வாடகையைப் பாங்கில் கட்டவும் மணியார்டர் செய்யவும் விதிகள் 2. உள்வாடகைக் காரர்களுக்கும் இச்சட்டம் உண்டு. 3. நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கும் போதே வாடகைப் பாக்கி இல்லாமல் கட்டிவர வேண்டும். இல்லாவிட்டால் கட்சியாட முடியாது. 4. ஒரு ஊரில் பல கட்டடங்கள் இருந்தால் ஒன்றுதான் சொந்த உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளலாம். மாத வாடகை ரூ. 25க்கு மேல் உள்ள வசிப்பதற்கான கட்டடங்களும், மாத வாடகை ரூ. 50க்கு மேல் உள்ள மற்ற கட்டடங்களும் காலியானால் அதிகாரிக்கு தெரிவிக்கவேண்டும் (Notice of Vacancy). 5. வாடகைப் பாக்கியைக் கொடுக்க, கண்ட்ரோலர் இஷ்டப்பட்டால் கெடுக் கொடுக்கலாம் 6. முன்சீப் கோர்ட்டில் நிறைவேற்ற வேண்டும். 7. ஹைகோர்ட்டுக்கும் ஜில்லா கோர்ட்டுகளுக்கும் 'ரிவிஷன்' அதிகாரம். 8. செலவுத் தொகை போடலாம். இன்னும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. திருத்தச் சட்டத்தைத் தனியாக விளக்குவதைவிட அத்திருத்தங்களைத் தாய்ச்சட்டத்திலேயே அந்த அந்த இடங்களில் பொருத்தி, ஜாகை - வாடகைக் கட்டுப்பாடு சட்டம் முழுதுமே இங்கு விளக்கப்பட்டிருக்கிறதை நேயர்கள் கவனிக்கவும்.]

முகவுரை:— சென்னை ராஜ்யத்திலுள்ள வசிப்பதற்கான கட்டடங்களையும் மற்ற வகைக் கட்டடங்களையும் வாடகைக்கு விடுவதையும் அக் கட்டடங்களின் வாடகையையும் கட்டுப்படுத்துவதற்காகவும், வாடகைக் காரர்களை (குடிக்கூலிக்காரர்களை)க் காரணமின்றி வெளியேற்றுவதைத் தடுக்கவும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

செக்ஷன் 1. சட்டத்தின் பெயர்; ஆரம்பத் தேதி, அமுலில் இருக்கும் இடங்கள்:—(1) இச்சட்டம் 1949ஆம் வருடத்திய சென்னைக் கட்டடங்களின் ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு சட்டம் எனப்படும்.

(2) (a) இச்சட்டத்தின் செக்ஷன் 3 (2) தவிர மற்ற ஷரத்துக்கள் எல்லாம் சென்னைப் பட்டணத்திலும் மற்ற எல்லா முனிசிபல் பட்டணங்களிலும் அமுலில் இருக்கும்.

(b) செக்ஷன் 3 (2) மட்டில் சென்னைச் சர்க்காரால் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும் அறிக்கையில் குறிப்பிடப்படும் முனிசிபல் பட்டணங்களிலும், சென்னைப் பட்டணத்திலும்தான் அமுலில் இருக்கும்.

(c) இச்சட்டத்தின் செக்ஷன் 3 (2) தவிர மற்ற எல்லா ஷரத்துக்களையுமோ அல்லது சில ஷரத்துக்களை மட்டுமோ, சென்னை ராஜ்யத்திலுள்ள மற்ற எந்த இடத்திலும், குறிப்பிட்ட தேதி முதல் அமுலில் இருக்கும்படி, கெஜட் அறிக்கை மூலம் விஸ்தரிக்கச் சென்னைச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அவ்வித அறிக்கைகளை ரத்து செய்யவும், திருத்தவும் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

(3) இச்சட்டம் உடனே (14-12-1949ல்) அமுலுக்கு வந்து 30-9-1951 முடிய அமுலில் இருக்கும்.

செக்ஷன் 2. சொற்களின் பொருள்:— விஷயத்தைக் குறித்தோ சந்தர்ப்பத்தைக் குறித்தோ பொருந்தாமல் போனாலொழிய, இச் சட்டத்தில் உபயோகிக்கப்படும் கீழ்க்கண்ட சொற்களின் பொருள் பின் வருமாறு:—

(i) "கட்டடம்" (Building) என்றால் வசிப்பதற்காகவோ வசிப்பதற்கல்லாத உபயோகத்திற்காகவோ, தனியாக வாடகைக்கு விடப்பட்டிருக்கும் அல்லது வாடகைக்கு விட வேண்டியதாக இருக்கும் எவ்விதக் கட்டடத்தையும், குடிசையையும், கட்டடத்தின் பாகத்தையும், குடிசையின் பாகத்தையும் குறிக்கும். கீழ்க் கண்டவைகளும் அதில் அடங்கியவையே:— அக்கட்டடம் அல்லது குடிசை அல்லது அவைகளின் பாகத்துடன் வாடகைக்கு விடப்பட்டிருக்கும் அல்லது வாடகைக்கு விடவேண்டியதாக இருக்கும், தோட்டம், காலி இடம், சிற்றில் அல்லது சவுக்கண்டி. அக் கட்டடம் அல்லது குடிசை அல்லது

அவைகளின் பாகத்துடன் அவைகளில் உபயோகப்படுத்திக் கொள்வதற்காக கட்டடக்காரரால் கொடுக்கப்படும் தட்டுமுட்டுச் சாமான்களும் (furniture). ஆனால் சாப்பாட்டு விடுதிகளிலும் ஹோட்டல்களிலும் உள்ள அரைகளுக்கு இச் சட்டம் கிடையாது.

(ii) "கண்ட்ரோலர்" (Controller) என்ருல் இச்சட்டத்தில் கண்ட்ரோலர் என்பவர் செய்யவேண்டியதாகக் குறிப்பிட்டிருக்கிற வேலைகளைச் செய்ய நியமிக்கப்படும் அதிகாரியைக் குறிக்கும்.

(iii) "கட்டடக்காரர்" (Landlord) என்பதில் அடங்கியவர்கள்:— தமக்காகவோ, வேறு ஒருவருக்காகவோ, தமக்கும் வேறு நபர்களுக்கும் சேர்த்தோ, அல்லது ஏஜண்டு, எக்சிகூடர், அட்மினிஸ்ட்ரேடர், ரிசீவர், அல்லது கார்டியன் என்ற முறைமையிலோ ஒரு கட்டடத்தின் வாடகையை வாங்கி வருபவர்களும், வாங்க உரிமை உள்ளவர்களும் அடங்கியவர்கள். கட்டடத்தை வாடகைக்கு விட்டால் மேற்கண்டபடி வாடகை வாங்கக் கூடியவர்களும் சேர்ந்தவர்களே.

விவரணம்:—ஒரு கட்டடத்தின் வாடகைக்காரர் (tenant) தமக்குள் உள்குடி (Subtenant) வைத்தால், அந்த உள்குடிக்காரர் சம்பந்தப்பட்ட வரையில், வாடகைக்காரரே கட்டடக்காரராகக் (Landlord) கருதப்படுவார்.

(iii A) "விதிக்கப்படுவது" (Prescribed) என்ருல் இச்சட்டத்தின் கீழ் ஏற்படும் விதிகளின்படி உத்தரவிடப்படுவது என்று அர்த்தம்.

(iv) "வாடகைக்காரர்", "குடியிருப்பவர்" அல்லது "குடிக்கூலிக்காரர்" (Tenant) — என்ருல் ஒரு கட்டடத்தின் வாடகையைக் கொடுப்பவர், யார் சார்பாக வாடகை கொடுக்கப்படுகிறதோ அவர்; குடியிருப்பவர் இறந்துபோய்விட்டால், அதுவரை அவருடன் குடும்பத்தோடு குடும்பமாக வசித்து வந்த அவருடைய மனைவி அல்லது கணவன், மகன், மகள் இவர்கள்; வாடகைக்கு ஒப்புக்கொண்ட கெடு முடிந்துபோன பிறகும் கட்டடத்தைத் தொடர்ச்சியாய்ச் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருப்பவர்கள் — இவர்களைக் குறிக்கும். ஆனால் ஒரு கட்டடத்தின் வாடகைக்காரர் அக் கட்டடத்தை வேறு ஒருவர் வசம் விட்டிருந்தால், அதன்மூலம் அக்கட்டடத்தைத் தம் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பவரைக் குறிக்காது. மேலும் ஒரு முனிசிபல் கவுன்சில், அல்லது ஒரு ஸ்தல ஸ்தாபனம் அல்லது சென்னைக் கார்பரேஷன் இவர்களால் பொது மார்க்கெட், வண்டி ஸ்டாண்டு, கசாப்புக்கடை, மற்றக் கடைகள் இவைகளின் வாடகைகளை வசூல் செய்யும் பாத்தியம் ஒருவருக்குக் குத்தகையாகக் கொடுக்கப்பட்டிருந்தால், அவர் இச் சட்டப்படி "வாடகைக்காரர்" (Tenant) ஆக மாட்டார்.

செக்ஷன் 3. கட்டடம் காலியானல் அதிகாரிக்கு நோட்டீஸ். (Notice of Vacancy.)

(1) ஒவ்வொரு கட்டடக்காரரும், கட்டடம் காலி செய்யப்பட்ட 7 நாட்களுக்குள், அது காலியான விஷயத்தை எழுத்து மூலம், இதற்காகச் சர்க்காரால் நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு (Authorised officer) தெரிவிக்கவேண்டும். கட்டடக்காரரே அக் கட்டடத்தை அனுபவித்து வருவதை நிறுத்தியதால் அக் கட்டடம் காலியானலும், வாடகைக்காரரின் கெடு முடிந்ததால் கட்டடம் காலியானலும், சர்க்காரே கட்டடத்தை எடுத்துக்கொண்டு பிறகு விடுவிக்கப்பட்டதால் காலியானலும், மேற்கண்டபடி அதிகாரிக்கு நோட்டீஸ் (Notice of Vacancy) கொடுக்கவேண்டும்.

ஆனல் செக்ஷன் 7 (3) படி ஒரு கட்டடக்காரர் மனுப்போட்டு உத்தரவு வாங்கி, அதனல் ஒரு கட்டடம் காலியானல், மேற்கண்டபடி நோட்டீஸ் கொடுக்கவேண்டியதில்லை. மேலே கண்டபடி கொடுக்கவேண்டிய நோட்டீசில் விதிகளால் குறிப்பிடப்படும் விவரங்கள் இருக்க வேண்டும்.

(2) இச் சட்டத்தின் செக்ஷன் 1 (2)bன் படி இவ்விதி அமுலில் இருக்க வேண்டுமென்று சர்க்காரால் அறிவிக்கப்படும் முனிசிபல் பட்டணங்களிலும், சென்னைப் பட்டணத்திலும், 1951 ஆம் வருடத்திய சென்னைக் கட்டடங்கள் ஜாகை-வாடகை கட்டுப்பாடு சட்டம் அமுலுக்கு வந்த பிறகு (1-5-1951க்குப் பின்) ஒரு வாடகைக்காரர் தாம் குடியிருந்துவரும் கட்டடத்தை வேறு ஒருவர் வசம் ஒப்படைத்துவிட்டு, மூன்று மாதங்களுக்குள் தாமே அக் கட்டடத்திற்குத் திரும்பி வராவிட்டால், அம் மூன்று மாதங்கள் முடிந்ததும் அக் கட்டடம் காலியாகி விட்டதாகப் பாவிக்கப்படும். அதிலிருந்து 7 நாட்களுக்குள் அவ்விதம் அக் கட்டடம் காலியாக்கப்பட்டதை எழுத்து மூலம் இதற்காக நியமிக்கப்படும் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டியது வாடகைக்காரருடைய கடமையாகும்; இவ்விதம் கட்டடம் காலியான

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
187708

விஷயம் கட்டடக்காரருக்கும் தெரிந்திருந்தால் அவரும் அதிகாரிக்கு மேற்கண்டபடி தெரிவிக்க வேண்டியது அவருடைய கடமையாகும்.

ஆனால் வாடகைக்காரர் மேற்கண்ட அதிகாரியிடம் தாம் அக்கட்டடத்திற்கு 6 மாதத்திற்குள் திரும்பி வரலாமென்று எழுத்து மூலம் அனுமதி பெற்றுக் கொண்டால், அந்த 6 மாதங்கள் சென்றதும் அவர் திரும்பி அக் கட்டடத்திற்கு வராவிட்டால்தான் அது காலியானதாகப் பாவிக்கப்படும்.

விவரணம்: ஆனால் உள்குடி வைக்கப் பாத்தியமுள்ள வாடகைக்காரர்கள், மேற்கண்ட அதிகாரிக்குத் தெரிவித்துவிட்டு, இந்த செக்ஷனில் கண்ட ஷரத்துக்களை அனுசரித்து உள் குடி வைத்தால், மேற்கண்டபடி நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்ற இவ்விதி அவர்களுக்குக் கிடையாது.

(3) மேலே 1, 2 உட்பிரிவுகளின்படி கொடுக்கப்பட்ட நோட்டீஸ் தமக்குக் கிடைத்த 10 நாட்களுக்குள் மேற்சொன்ன அதிகாரியோ, ராஜ்ய சர்க்காரோ எழுத்து மூலம் கட்டடக்காரருக்கு, அக்கட்டடம் தேவையாக இருக்கிறதென்று தெரிவிக்காவிட்டால்தான், கட்டடக்காரர் அக் கட்டடத்தை வாடகைக்கு விடவும், தாமே உபயோகித்துக் கொள்ளவும் உரிமை உண்டு. அக் கட்டடம் ராஜ்ய சர்க்காருக்காகவோ, மத்திய சர்க்காருக்காகவோ, எந்த ஸ்தல ஸ்தாபனத்திற்காகவோ, சர்க்காருக்குட்பட்ட ஒரு பொது ஸ்தாபனத்திற்காகவோ, அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர் வசிப்பதற்காகவோ தேவையிருந்தாலும், மேற்கண்டபடி கட்டடக்காரருக்குத் தெரிவிக்கப்படும்.

(4) அக் கட்டடம் மேற்கண்ட உபயோகங்களுக்காகத் தேவையில்லை என்று நடுவில் தெரிவிக்கப்பட்டாலொழிய, அப் பத்து நாட்கள் முடியும்வரை வீட்டுக்காரர் அக் கட்டடத்தை வேறு ஒருவருக்கும் வாடகைக்கும் விடக் கூடாது; தாமும் உபயோகிக்கக் கூடாது.

(5) சர்க்கார் முதலியோரின் உபயோகத்திற்காக அக் கட்டடம் தேவை என்று முன் சொன்னபடி கேட்கப்பட்டால், கட்டடக்காரர் அக் கட்டடத்தை, இதற்காக நியமிக்கப்படும் அதிகாரியிடம் சுவாதீனம் கொடுத்துவிட வேண்டும். அப்படியானால் ராஜ்ய சர்க்காரே "குடியிருப்பவராக" (tenant) கருதப்படும். அக் கட்டடம் காலியான விஷயம் தெரிவிக்கப்பட்ட தேதி முதல் சர்க்காரே வாடகை கொடுப்பார்கள். வாடகைத் தொகை முதலிய விவரங்களைப் பற்றி கட்டடக்காரரும் சர்க்காரும் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்; ஒப்பந்தம் செய்து கொள்ளத் தவறினால், வாடகை முதலிய விவரங்களைச் சென்னையில் சிடி சிவில் கோர்ட்டும் மற்ற இடங்களில் அதிகாரமுள்ள சப் கோர்ட்டும், சப் கோர்ட் இல்லாவிட்டால் ஜில்லா கோர்ட்டும் நிர்ணயம் செய்ய வேண்டும். ஆனால் இச் சட்டப்படி அக் கட்டடத்திற்கு, "நியாய வாடகை" (Fair Rent) எற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால், அதுவேதான் சர்க்கார் கொடுக்கவேண்டிய வாடகையாகும்; நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படாமலிருந்தால் இச் சட்டத்தில் நியாய வாடகை நிர்ணயம் செய்வது பற்றிய விதிகளை அனுசரித்து, கோர்ட்டால் நிர்ணயிக்கப்படும் நியாய வாடகை சர்க்காரால் கொடுக்கப்பட வேண்டும்.

மேலும் அக் கட்டடம் வசிப்பதற்கான ஒரு கட்டடமாக இருந்தால் அதை, செக்ஷன் 11 (1) படி கண்ட்ரோலரின் எழுத்து மூலமான அனுமதியின்றி, ஒரு வசிப்பதற்கல்லாத (non-residential building) கட்டடமாகச் சர்க்கார் மாற்றக் கூடாது.

மேலும் கட்டடக்காரரின் சம்மதமிருந்தாலொழிய, அக் கட்டடத்தின் அமைப்பைச் சர்க்கார் மாற்ற முடியாது.

(6) மேற்கண்டபடி சர்க்கார் உபயோகத்திற்கு அக் கட்டடம் எடுத்துக் கொள்ளப்படாமலிருந்து, கட்டடக்காரர் தாமே அக்கட்டடத்தை உபயோகிக்காமலுமிருந்து, பிறகு அக் கட்டடம் வாடகைக்கு விடப்பட்டால், இச்சட்ட ஷரத்துக்களினால் எத்தனை நாட்களுக்கு அக்கட்டடத்தை வாடகைக்கு விட முடியாமல் போய்விட்டதோ அந்த நாட்களுடைய வாடகையையும் அக் கட்டடத்தை ஒப்புக்கொள்ளும் புதிய வாடகைக்காரர் கொடுக்க வேண்டியது.

(7) (a) ஒரே ஊரில் ஒரு கட்டடக்காரருக்கு இரண்டு அல்லது அதிகமான கட்டடங்கள் சொந்தமாக இருந்து, அவைகள் 1-1-1950க்குப் பின் வாடகைக்கு விடப்படாமலுமிருந்தால், 1951 ஆம் வருடத்திய கட்டடங்கள் ஜாகை—வாடகைக் கட்டுப்பாடு திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து (1-5-1951) 15 நாட்களுக்குள், கட்டடக்காரர் தம் சொந்த உபயோகத்திற்காக ஒரு கட்டடத்தைப் பொறுக்கிக் கொள்ளவேண்டும். எந்தக் கட்டடத்தைத் தாம் சொந்த உபயோகத்திற்கு வைத்துக் கொண்டிருக்கிறார் என்றும், சொந்த உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளப்படாத கட்டடங்களின் விபரத்தையும் விபரமாகக் கண்டு சர்க்காரால் நியமிக்கப்படும் அதிகாரிக்கு

கட்டடக்காரர் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். (b) அப்படிக் கட்டடக்காரர் கொடுக்கும் நோட்டீசில் சில விஷயங்களைக் குறிப்பிடவேண்டும். அதாவது: (i) கட்டடக்காரர் தம் சொந்த உபயோகத்துக்காகப் பொறுக்கிக் கொண்ட கட்டடத்தைத் தவிர, அவருடைய மற்றக் கட்டடங்கள் எதிலாவது 1-1-1950 முதல் தொடர்ச்சியாகத் தம்முடைய குடும்பத்தினர் அல்லது ஜீவனத்திற்கு அவரை நம்பி அவருடன் கூட இருப்பவர் எவராவது அக் கட்டடத்தில் இருந்து வந்திருக்கின்றனரா என்றும். (ii) எக் கட்டடமாவது இனி தம் குடும்பத்தினருடைய உபயோகத்திற்குத் தேவையாக இருக்கிறதா என்றும் — நோட்டீசில் குறிப்பிடவேண்டும். (c) இதற்காக நியமிக்கப்படும் அதிகாரிக்கு மேற்கண்ட நோட்டீசில் சொல்லியிருக்கும் i ஆவது பிரிவின்படி குறிப்பிடப்பட்ட சங்கதி உண்மை என்று தோன்றினல், கட்டடக்காரரின் உறவினரோ, அவருடன்கூட இருப்பவரோ முன்போல் அக் கட்டடத்திலேயே இருந்து வரலாமென்று உத்தரவிடுவார். அது உண்மை என்று அவருக்குத் தோன்ருவிட்டால், அவ்வித உறவினர் அல்லது கூட இருப்பவர் அக் கட்டடத்தில் இருக்க அனுமதி மறுத்து விடுவார். (d) மேற்கண்ட நோட்டீசில் ii ஆவது பிரிவின்படி கண்ட சங்கதி உண்மை என்று அதிகாரிக்குத் தோன்றினல், கட்டடக்காரருடைய உறவினர் அக் கட்டடத்தில் இருந்து வர அனுமதி கொடுப்பார். உண்மை அல்லவென்று அவருக்குத் தோன்றினல், அதற்கு அனுமதி கொடுக்க மறுத்துவிடுவார். (e) மேற்கண்ட (c) (d) பிரிவுகளின்படி அதிகாரியால் செய்யப்படும் உத்தரவு கிடைத்த 15 நாட்களுக்குள், கட்டடக்காரர் ராஜ்ய சர்க்காருக்கு அப்பீல் செய்யலாம். (f) இவ்விதியின் (a) பிரிவின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு நோட்டீசும், கட்டடக்காரர் தம் சொந்த உபயோகத்திற்காக வைத்துக்கொண்டிருக்கும் கட்டடத்தைத் தவிர மற்றக் கட்டடங்களுக்கு, செக்ஷன் 3 (1)-ன் படி கொடுத்த கட்டடம் காலியாக இருப்பதைத் தெரிவிக்கும் ஒரு நோட்டீசாக (Notice of Vacancy) பாவிக்கப்படும். ஆனல் (b) பிரிவின் படி கொடுக்கப்படும் நோட்டீஸ் அதிகாரியின் உத்தரவு கிடைத்த 15-நாட்கள் முடிந்தவுடன் அல்லது அப்பீல் செய்யப்பட்டிருந்தால் அப்பீல் முடிந்த தேதியன்று கொடுத்த நோட்டீசாகப் (Notice of Vacancy) பாவிக்கப்படும்.

(8) (a) இதற்காகச் சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட எந்த அதிகாரியும், கீழ்க்கண்டவர்களை எந்தக் கட்டடத்திலிருந்தும் உடனடியாக (Summarily) அகற்றலாம். அதாவது இந்தச் செக்ஷனில் கண்ட ஷரத்துக்களுக்கு மாருக ஒரு கட்டடத்தை வைத்துக் கொண்டிருக்கும் கட்டடக்காரர், வாடகைக்காரர் அல்லது வேறு எவ்வித நபர்களையும் சர்க்காரே ஒரு கட்டடத்தின் வாடகைக்காரர்களாக இருந்தால், அவர்களுடைய வாடகைக் கெடு முடிந்தும், கட்டடத்தைக் காலி செய்யாமல் வைத்துக் கொண்டிருக்கும் சர்க்கார் உத்யோகஸ்தர்கள், ஸ்தல ஸ்தாபனங்கள், அல்லது பொது ஸ்தாபனங்கள் இவர்களையும் கட்டடங்களிலிருந்து அவ்வதிகாரி அப்புறப்படுத்தலாம். மேலே (c), (d) இப்பிரிவுகளின்படி அப்புறப்படுத்த மட்டில் 1 வாரம் முன் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். **விவரணம்:**— 1951-ஆம் வருடத்திய ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு திருத்தச் சட்டம் அமுலுக்கு வருமுன் ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலும் இதன்படி அதிகாரி எக்கட்டடத்தையும் சுவாதீனம் எடுத்துக் கொள்ளலாம். (b) அவ்விதக் கட்டடங்களைச் சுவாதீனம் செய்து கொள்வதில் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டால், அவ்வதிகாரி, தேசாசாரப்படி வெளி வராத ஸ்திரீகள் அப்பால் போக எச்சரிக்கை செய்து வசதி அளித்துப் பிறகு தேவையானல் பூட்டுக்களை உடைத்தும், தாழ்ப்பாள்களை அகற்றியும், கதவுகளைத் திறந்தும், வேறு அவசியமான காரியங்களைச் செய்தும் சுவாதீனம் செய்து கொள்ளலாம். (c) இவ்விதம் அப்புறப்படுத்தப்படுபவர் அக்கட்டடத்திற்கான நியாய வாடகையையும் சர்க்காரால் சுவாதீனம் செய்துகொள்ள ஏற்பட்ட செலவையும் கொடுக்க வேண்டும்.

(9) இந்த 3-ஆவது செக்ஷனில் கண்ட ஷரத்துக்கள் எதுவும் மாதம் வாடகை ரூபாய் 25-க்கு அதிகப்படாத வசிப்பதற்கான கட்டடங்களுக்கும்; மாதம் வாடகை ரூபாய் 50-க்கு மேற்படாத வசிப்பதற்கல்லாத கட்டடங்களுக்கும்; தங்களுடைய உத்தியோகஸ்தர்கள், சிப்பந்திகள் ஏஜண்டுகள் இவர்கள் வசிப்பதற்காக மட்டில் வைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் ஒரு கம்பெனி சங்கம் அல்லது கூட்டு வியாபாரத்தின் கட்டடங்களுக்கும் கிடையாது.

செக்ஷன் 4. நியாய வாடகை நிர்ணயம்.

(1) ஒரு கட்டடத்தின் கட்டடக்காரரோ, வாடகைக்காரரோ கண்ட்ரோலருக்கு மனுச் செய்துகொண்டால், அவர் விசாரணை செய்து அக்கட்டடத்தின் "நியாய வாடகை" (Fair Rent) எவ்வளவு என்று நிர்ணயம் செய்வார்.

(2) நியாய வாடகை நிர்ணயம் செய்வதில் கீழ்க்கண்ட விஷயங்களைக் கண்ட்ரோலர் நன்கு கவனிக்க வேண்டும். அதாவது:— (a) 1-4-1940-க்கு முன் உள்ள 12 மாதங்களில் அதே சுற்றுவட்டாரத்தில் அக்கட்டடத்திற்கோ அதுபோலுள்ள வேறு கட்டடத்திற்கோ கொடுக்கப்பட்டு வந்த வாடகை. (b) அந்தக் காலத்திற்குச் சென்னை கார்பரேஷன், முனிசிபாலிடி அல்லது ஸ்தல ஸ்தாபனங்களின் வரி விதிப்புக்கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வாடகை மதிப்பு. (c) 1-4-1940-க்குப் பின் வாடகைக்காரரால் வாடகைக்கு மேல் அதிகமான தொகைகள் (Premium) கொடுக்கப்பட்டிருப்பது. — இவைகளைக் கண்ட்ரோலர் கவனிப்பார்.

(3) வசிப்பதற்கான கட்டடங்களின் நியாய வாடகையை நிர்ணயம் செய்வதில் கண்ட்ரோலர் கீழ்க்கண்ட தொகைகளைச் சேர்த்துக் கொள்வார் அதாவது:—(i) மேற்கண்டபடி கணக்குச் செய்யப்பட்ட வாடகை மாதம் 1க்கு ரூ. 25க்கு மேற்படாவிட்டால் அத்துடன் 12ல் 1 பங்கு ($8\frac{1}{3}\%$) கூட்டிக் கொள்ளலாம். (ii) மாத வாடகை ரூ. 25-க்கு மேல் ரூ. 50க்குள் இருந்தால் அத்துடன் 8ல் 1 பங்கு ($12\frac{1}{2}\%$) கூட்டிக்கொள்ளலாம். (iii) மாத வாடகை ரூ. 50க்கு மேற்பட்டால் 4ல் 1 பங்கு (25%) கூட்டிக் கொள்ளலாம்.

ஆனால் 1-4-1940க்கு பின் கட்டப்பட்ட வசிப்பதற்கான கட்டடங்களுக்கு வாடகைத் தொகையுடன் ரூ. 100க்கு ரூ. 25, ரூ. 37-8-0 ரூ. 50 வீதம் (25%; $37\frac{1}{2}\%$; 50%) வீதம் மேற்சொன்ன மூன்று வகை வாடகையுள்ள கட்டடங்களுக்கும் முறையே கூட்டிக் கொள்ளலாம்.

(4) வசிப்பதற்கல்லாத கட்டடங்களின் நியாய வாடகை நிர்ணயம் செய்வதில் (i) மாத வாடகை ரூ. 50க்கு மேற்படாமல் போனால் $37\frac{1}{2}$ சத வீதமும் (ii) மாத வாடகை ரூ. 50க்கு மேற்பட்டால் 50 சத வீதமும் (அதாவது சரி பாதி) கூட்டிக்கொள்ளலாம்.

ஆனால் 1-4-1940க்குப் பின் கட்டப்பட்ட வசிப்பதற்கல்லாத கட்டடமாக இருந்தால் மாத வாடகை ரூ. 50க்கு மேற்படாத கட்டடங்களுக்கு 50 சத விகிதமும் மாதவாடகை ரூ. 50க்கு மேற்பட்டால் 100 சத விகிதமும் கூட்டிக் கொள்ளலாம்.

(5) 1-10-1946க்கு முன் ஒரு கட்டடத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும், கட்டடக்காரர் கண்ட்ரோலருக்கு மனுச் செய்து கொண்டால், மேற்கண்ட புதிய விதிகளை அனுசரித்து நியாய வாடகையை அதிகரிக்க, கண்ட்ரோலருக்கு அதிகாரம் உண்டு.

செக்ஷன் 5. நியாய வாடகையை உயர்த்துவதும் குறைப்பதும்.

(1) இச் சட்டப்படி ஒரு கட்டடத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு, மறுபடியும் அதை அதிகரிக்க முடியாது. ஆனால் கட்டடக்காரரின் செலவில், அப்பொழுது அக் கட்டடம் வாடகைக்கு விடப்பட்டிருந்தால் வாடகைக்காரர் கேட்டுக்கொண்டதின் பேரில், ஏதாவது கட்டடத்தில் விஸ்தரிப்பு, அபிவிருத்தி அல்லது மாறுதல் செய்யப்பட்டிருந்தால் அக்காரணத்தைக் கொண்டு நியாய வாடகையை அதிகரிக்க முடியும். அப்படி அதிகமாக்கப்படும் நியாய வாடகையும் அதே விஸ்தீர்ணம் வசதிகள் உள்ள அக்கம் பக்கத்திலுள்ள கட்டடங்களின் நியாய வாடகைக்குமேல் இருக்கக் கூடாது; மேலும் விஸ்தரிப்பு, அபிவிருத்தி அல்லது மாறுதல் பூராவும் செய்து முடிந்த பிறகுதான் வாடகையை அதிகரிக்க முடியும். இப்படி நியாய வாடகையை அதிகமாக்குவதில் கட்டடக்காரருக்கும் வாடகைக்காரருக்கும் ஏதாவது தகராறுகள் ஏற்பட்டால் அவைகளைக் கண்டு மனுப்போட்டால் கண்ட்ரோலரால் முடிவு செய்யப்படும்.

(2) ஒரு கட்டடத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு அக்கட்டடத்தின் இட விஸ்தீர்ணமோ, வசதிகளோ குறைந்து போனால், வாடகைக்காரர் வாடகையைக் குறைக்கவேண்டுமென்று கேட்கலாம். இதிலும் கட்டடக்காரருக்கும் வாடகைக்காரருக்கும் ஏற்படும் தகராறுகளைக் கண்ட்ரோலரேதான் தீர்த்து வைக்க உரிமை உள்ளவர்.

செக்ஷன் 5-A. சிலசந்தர்ப்பங்களில் வாடகையை உயர்த்தலாம்.

(1) ஒரு கட்டடத்திற்கு 30-9-1946 உடன் முடிவடையும் அரை வருடத்திற்கு (முனிசிபாலிடி பஞ்சாயத்து முதலிய) ஸ்தல ஸ்தாபனத்திற்குக் கொடுக்கப்பட்ட வீட்டு வரி செஸ் இவைகளைவிட, அதே கட்டடத்திற்கு 1-4-1950 உடன் முடிவடையும் அரை வருடத்திற்குக் கொடுக்கவேண்டிய வரி செஸ் இவைகள் அதிகமாக இருந்தால், கட்டடக்காரர் அவ்விதம் அதிகமாக இருக்கும் வீட்டு வரி செஸ் இவைகளை வாடகைக்காரரிடமிருந்து

வசூல் செய்ய உரிமை உண்டு. வாடகைக்கு விடப்பட்ட பிறகு உள்ள முதல் அரை வருடத்திற்குக் கொடுக்க வேண்டிய வரி செஸ் இவைகளைவிட 1-4-1950 இருக்கும் வரி அதிகமாக இருந்தாலும் இதே விதிதான். ஆனால் வாடகை அதிகமான காரணத்தினால் வரி செஸ் இவைகளும் அதிகமாக்கப் பட்டிருந்தால், கட்டடக்காரருக்கு மேற்கண்ட உரிமை கிடையாது.

(2) இது விஷயமாகக் கட்டடக்காரருக்கும் வாடகைக் காரருக்கும் ஏதாவது தகராறு ஏற்பட்டால் அதைக் கண்ட்ரோலர் முடிவு செய்வார்.

செக்ஷன் 6. "நியாய வாடகை" அல்லது "ஒப்பந்த வாடகை" யை விட வேறு அதிகத் தொகைகள் வாங்கக்கூடாது.

(1) ஒரு கட்டடத்தின் நியாய வாடகை, கண்ட்ரோலரால் நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு (a) நியாய வாடகைக்குக் கூடுதலாக வெகுமதி அல்லது வட்டம் (Premium) போன்ற மொத்தத் தொகைகளையும் செக்ஷன் 5 அல்லது 5 A-ல் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அதிக வாடகை வாங்குவதைத் தவிர வேறு வகையில் அதிகமான வாடகையையும் —இவ்விரண்டையும் கட்டடக்காரர் கேட்கவும், வாங்கவும் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தவும் கூடாது. ஆனால் இரண்டுமாத வாடகைத் தொகைக்கு மேற்படாத தொகையைக் கட்டடக்காரர் முன் பணமாக (advance) மட்டில் வாங்கிக் கொள்ளலாம்; கொடுக்க வேண்டுமென்றும் கேட்கலாம். (b) இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு ஒரு கட்டடத்தை வாடகைக்கு விடவேண்டியதற் காகவோ, வாடகைப் பாத்தியத்தை நீடிப்பதற்காகவோ, புதுப்பிப்பதற்காகவோ, மேலே கண்ட விதிக்கு மாறாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வட்டம் அல்லது அதிக வாடகைத் தொகைகளை வாங்கியவர், அதை அவர் எப்பொழுது வாங்கி இருந்தாலும் அதை யாரிடம் வாங்கினாரோ அவரிடம் திருப்பிக் கொடுத்து விடவேண்டும். அல்லது அதைக் கொடுத்தவர் இஷ்டப்படி ஈடு செய்து கொள்ளவேண்டும். ஆனால் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுவதற்கு முன் அதிக வாடகை வாங்கியவர்கள், நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட தேதிக்கு முன் உள்ள ஒரு வருடத்தில் எவ்வளவு வாடகை அதிகமாக வாங்கி இருக்கிறாரோ அதை மட்டில் திருப்பிக் கொடுத்தால் போதும்.

(2) ஒரு கட்டடத்திற்குக் கண்ட்ரோலரால் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படா விட்டாலும் (a) ஒரு கட்டடத்திற்கு எவ்வளவு வாடகை என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறாரோ அதற்குமேல் அதிகமாக யாதொரு வெகுமதி அல்லது வட்டம் (Premium) போன்ற மொத்தத் தொகைகளை 1951-ஆம் வருடத்திய ஜாகை வாடகைக் கட்டுப்பாடு திருத்தச் சட்டத்திற்குப் பின் (1-5-1951-க்குப் பின்) கேட்கவும், வாங்கவும், வற்புறுத்தவும் கூடாது. ஆனால் கட்டடக்காரர் இரண்டு மாத வாடகைக்கு அதிகப்படாத தொகையை முன் பணமாக (advance) க் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். (b) இதற்கு மாறாகக் கொடுக்கப்படும் தொகைகளைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டியது கட்டடக்காரரின் கடமையாகும். அல்லது அதைக் கொடுத்தவர் அத்தொகையை வேறு வகையில் ஈடு செய்து கொள்ளும்படி சொன்னாலும் அப்படியே செய்யவேண்டியது கட்டடக்காரரின் கடமையாகும்.

(3) மேற்கண்ட இரண்டு விதிகளுக்கு மாறாக ஏற்படும் ஒப்பந்தங்கள் செல்லா.

செக்ஷன் 6-A. வாடகை அல்லது அட்வான்ஸ் கொடுத்தால் ரசீது கொடுக்க வேண்டும். வாடகையை பாங்கியில் கட்டவும், மணியார்டர் செய்யவும் உரிமை.

(1) குடியிருப்பவர் கொடுக்கும் வாடகைத் தொகைகளுக்கும், அட்வான்சுத் தொகைக்கும் அவருக்கு, கட்டடக்காரரோ, அவரிடம் அதிகாரம் பெற்ற ஏஜண்டோ, ரசீது கொடுக்க வேண்டும். இதற்காக ஏற்படும் விதிகளில் கண்டபடி ரசீதில் விவரங்கள் இருக்கவேண்டும்.

(2) கட்டடக்காரர் தமக்குச் சட்டப்படி கொடுக்கப்படவேண்டிய வாடகையைப் பெற்றுக் கொள்ள மறுத்தாலும் (refuses) உழப்பினாலும் (evades) வாடகை கொடுக்கவேண்டியவர் அவருக்கு ஒரு நோட்டீசு கொடுக்கலாம். அதாவது எந்தப் பாங்கியில் (Bank) வாடகைத் தொகையைத் தாம் கட்டவேண்டுமென்று தமக்குத் தெரிவிக்கும்படி கட்டடக்காரரை நோட்டீஸ் மூலம் அவர் கேட்கலாம். நோட்டீஸ் கிடைத்த 10 தினங்களுக்குள், கட்டடக்காரர் ஒரு பாங்கியைக் குறிப்பிட்டு அதில் தம்பெயருக்கு வாடகையைக் கட்டி வரவேண்டுமென்று பதில் எழுதவேண்டும். கட்டடம் எந்த ஊரில் இருக்கிறதோ அதே இடத்தில் உள்ள ஒரு பாங்கியை அவர் குறிப்பிடவேண்டும். அப்படி அந்த ஊரில்

ஒரு பாங்கு கூட இல்லாவிட்டால், அந்த ஊர் எல்லையிலிருந்து 3-மைல்களுக்குள் இருக்கும். ஒரு பாங்கியைக் குறிப்பிடவேண்டும். ஒரு தடவை ஒரு பாங்கியைக் குறிப்பிட்டாலும் மறுபடி அதை மாற்றி மேற்கண்டபடியுள்ள வேறு பாங்கியைக் குறிப்பிட்டு அது விபரத்தை வாடகை கொடுக்க வேண்டியவருக்குக் கட்டடக்காரர் எழுத்து மூலம் தெரிவிக்கலாம்.

(3) அவ்விதம் குறிப்பிடப்படும் பாங்கியில் வாடகைத் தொகையை, குடியிருப்பவர் கட்டி வரவேண்டும்.

(4) மேற்கண்டபடி கட்டடக்காரர் ஒரு பாங்கியைக் குறிப்பிடத் தவறினால், வாடகை கொடுக்கவேண்டியவர், வாடகைத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பி வர வேண்டும். மணியார்டர் கமிஷனை வாடகைத் தொகையில் கழித்துக்கொள்ளலாம். கட்டடக்காரர் தாம் வாடகையை இனி நேரிலேயே வாங்கிக்கொள்கிறேன், என்றாவது, மேற்கண்டபடி ஒரு பாங்கியில் கட்டும்படி குறிப்பிட்டாவது வாடகை கொடுக்கவேண்டியவருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கும் வரை, வாடகை கொடுக்க வேண்டியவர் மேற்கண்ட விதம், வாடகையை மணியார்டர் மூலம் அனுப்பிவரவேண்டும்.

செக்ஷன் 6-B. கட்டடக்காரரின் விலாசம் தெரியாவிட்டாலும், யாருக்கு வாடகை கொடுப்பதென்று சந்தேகம் அல்லது தகராறு ஏற்பட்டாலும் வாடகையைக் கட்ட வசதி.

(1) வாடகை கொடுக்கவேண்டியவருக்கு, கட்டடக்காரர் அல்லது அவருடைய ஏஜண்டின் விலாசம் தெரியாவிட்டால், வாடகைத் தொகைகளை இதற்காக நியமிக்கப்படும் "அதிகாரி" யிடம் கட்டிவரலாம். எந்த அதிகாரியிடம் கட்டவேண்டுமென்று சர்க்கார் விதிகள் செய்வார்கள். வாடகைத் தொகையுடன், விதிகளால் குறிப்பிடப்படும் ஒரு நோட்டீஸ் படியும் சேர்த்துக் கட்டவேண்டும். கட்டடக்காரருடைய விலாசம் தெரியும் வரை வாடகையைப் படியுடன் இப்படிக் கட்டிவரலாம்.

(2) இவ்விதம் வாடகை செலுத்தப்பட்டவுடன், கண்ட்ரோலர் கட்டடக்காரர் கடைசியில் வசித்த இடத்தில் ஒட்டும்படி நோட்டீசு அனுப்புவார். கட்டடக்காரர் கடைசியில் விதிகளின்படி மனுப்போட்டு வாடகைத் தொகையை கண்ட்ரோலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(3) மேலும், ஒரு கட்டடத்தின் வாடகையை யாருக்குக் கொடுக்கவேண்டும் என்ற சந்தேகமோ, தகராறோ ஏற்பட்டாலும், இதற்காக விதிகளால் குறிப்பிடப்படும் "அதிகாரி" யிடம் வாடகைக்காரர் கொடுக்கவேண்டிய வாடகையைக் கட்டிவிடலாம். இது விஷயத்தைக் கண்ட்ரோலருக்குத் தெரிவிக்க வேண்டும். யாருக்கு வாடகை கொடுக்கப்பட வேண்டுமென்ற சந்தேகம் தீரும் வரையிலோ, தகராறுகள் இருந்தால் அவை கோர்ட்டால் முடிவு செய்யப்படும் வரையிலோ, அல்லது கண்ட்ரோலர் கீழ்க்கண்டபடி ஓர் உத்தரவு பிறப்பிக்கும் வரையிலோ, மேற்கண்டபடி வாடகைத் தொகைகளை வாடகைக்காரர் அந்த அதிகாரியிடமே கட்டிவரலாம்.

(4) இது விஷயம் கண்ட்ரோலருக்குத் தெரிவிக்கப்பட்டவுடன், சந்தேகம் அல்லது தகராறு ஏற்பட்டிருப்பது உண்மைதான் (bonafide) என்று அவருக்குத் தோன்றினால், அது தீரும்வரை வாடகை கொடுக்கவேண்டியவர் வாடகைத் தொகைகளை அந்த அதிகாரியிடமே கட்டிவரலாமென்று உத்தரவிடுவார். அது உண்மை அல்ல என்று கண்ட்ரோலருக்குத் தோன்றினால் அவர் உடனே கட்டப்பட்ட வாடகைத் தொகையை கட்டடக்காரருக்குக் கொடுத்துவிடும்படி உத்தரவிடுவார்.

(5) தகராறுகள் கோர்ட் தீர்ப்பு மூலம் முடிவு செய்யப்பட்டால் அத்தீர்ப்பின்படி யார் வாடகையைப் பெற்றுக்கொள்ள உரிமை உண்டோ அவர் தான் மேற்கண்ட விதம் அந்த அதிகாரியிடம் கட்டப்பட்ட வாடகைத் தொகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். மனோராஜியின் பேரில் தராறுகள் தீர்க்கப்பட்டால் அதன்படி யார் அத்தொகைகளை அதிகாரியிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளலாமென்று, கண்ட்ரோலர் தான் முடிவு செய்வார்.

செக்ஷன் 7. குடியிருப்பவர்களை அகற்றுவதுபற்றி

(1) ஒரு கட்டடத்தில் குடியிருப்பவரை அதாவது, வாடகைக்காரரைக் கட்டடத்தை விட்டு அகற்றவேண்டுமானால் இந்தச் செக்ஷனில் கண்ட விதிகளின்படிதான் அகற்றலாமே ஒழிய, ஒரு டிக்ரியை நிறைவேற்றியோ வேறு வகையிலோ அகற்றமுடியாது.

ஆனால் இந்த விதி ராஜ்யசர்க்காரின் கட்டடத்தில் குடியிருப்பவர்களுக்குக் கிடையாது.

மேலும், கட்டடக்காரரின் பாத்தியத்தை வாடகைக்காரர் மறுத்தாலும், அல்லது தமக்கு சாசுவதக் குத்தகை பாத்தியம் இருப்பதாக உரிமை கொண்டாடினாலும், அது உண்மையாகக்

(bonafide) கொண்டாடப்படுகிறதா என்று கண்ட்ரோலர் தீர்மானம் செய்வார்; உண்மை தான் என்று அவர் தீர்மானம் செய்தால், கட்டடக்காரர் வாடகைக்காரர் மீது சிவில் கோர்ட்டில் தாவா செய்ய உரிமை எற்பட்டு விடும்; சிவில் கோர்ட்டில் வாடகைக்காரர் சொல்லும் கட்சி தவறென்று எற்பட்டாலும் இந்தச் செக்ஷனில் கண்ட விதிகளை அனுசரித்து சிவில் கோர்ட்டுகளிலும் வாடகைக் காரரை அகற்றும்படி தீர்ப்புச் செய்யலாம்.

(2) வாடகைக்காரரைக் கட்டடத்தை விட்டு அகற்ற வேண்டுமானல் கட்டடக்காரர் கண்ட்ரோலரிடம் மனுப் போடவேண்டும். கண்ட்ரோலர் வாடகைக்காரருக்கு நோட்டீஸ் அனுப்பி அவர் கட்சியைச் சொல்லிக் கொள்ளச் சந்தர்ப்பம் அளித்து, கீழ்க்கண்ட காரணங்கள் எதாவது இருந்தால், வாடகைக்காரர் கட்டடத்தைக் காலி செய்து கட்டடக்காரரிடம் கட்டடத்தை ஒப்புவிக்க வேண்டுமென்று உத்தரவிடுவார். கீழ்க்கண்ட காரணங்கள் ஒன்று மில்லாவிட்டால், கட்டடக்காரரின் மனுவைக் கண்ட்ரோலர் தள்ளிவிடுவார். வாடகைக்காரரை அகற்றப் போதுமான காரணங்களாவன:—(i) குடியிருப்பவர் கொடுக்க வேண்டிய வாடகையை எந்த எந்தத் தேதிகளில் கொடுக்கவேண்டுமென்று எதாவது ஒப்பந்தம் இருந்தால் அத்தேதியிலிருந்து 15 தினங்களுக்குள்ளும் அவ்விதம் யாதொரு ஒப்பந்தமும் இல்லாவிட்டால், ஒவ்வொரு மாத வாடகையையும் அடுத்த மாதம் கடைசித் தேதிக்குள்ளும் வாடகையைக் கொடுக்க வேண்டும். இவ்விதம் வாடகை கொடுக்கத் தவறினாலும் அல்லது வாடகையைத் தயாராக வைத்துக்கொண்டு கட்டடக்காரரிடம் கொடுக்க முயற்சிக்காவிட்டாலும் (tender) வாடகைக் காரரைக் கட்டடத்தைக் காலி செய்யும்படி கண்ட்ரோலர் உத்தரவிடவேண்டும். ஆனல் வாடகைக்காரர் வாடகை கொடுக்கத்தவறியது, வேண்டுமென்று இருந்ததல்ல (Not wilful) என்று கண்ட்ரோலர் அபிப்பிராயப்பட்டால், அவர் மேற்கண்டபடி உத்தரவு செய்வதற்கு முன், 15 தினங்களுக்கு அதிகப்படாத ஒரு குறிப்பிட்ட கெடுவுக்குள் வாடகைக்காரர் கொடுக்க வேண்டிய ஜாடா வாடகைப் பாக்கியையும் கட்டடக்காரருக்குக் கொடுத்து விடும்படி அவருக்குச் சந்தர்ப்ப மளிக்கலாம். (ii) வாடகைக்காரர் 23-10-1945க்குப் பின் கட்டடக்காரருடைய எழுத்து மூலமான சம்மதமின்றி, அவ்விதம் செய்யப் பாத்தியமில்லாமலே, தம் வாடகைப்பாத்தியத்தை வேறு ஒருவருக்கு மாற்றினலும், தாம் ஒப்புக்கொண்ட இடத்தையோ அதன் ஒரு பாகத்தையோ அவர் உள்வாடகைக்கு விட்டாலும்; அல்லது வாடகைக்காரர் எந்த உபயோகத்திற்காகக் கட்டடத்தை ஒப்புக் கொண்டாரோ அதை விட்டு அக்கட்டடத்தை வேறு வகையில் உபயோகப்படுத்தினலும்—அவர் கட்டடத்தைக் காலிசெய்ய வேண்டுமென்று கண்ட்ரோலர் உத்தரவிடவேண்டும். (iii) கட்டடத்தின் மதிப்பையோ, உபயோகத்தையோ வெகுவாக பாதிக்கும் விதம் வாடகைக்காரர் அக் கட்டடத்தில் நாச வேலைகள் செய்து பாழாக்கி யிருந்தால், அவர் அக்கட்டடத்தைக் காலி செய்ய வேண்டுமென்று கண்ட்ரோலர் உத்தரவிடவேண்டும். குடியிருப்பவர் அக்கட்டடத்தின் வேறு பாகங்களில் வசிப்பவர்களுக்கோ, அல்லது அக்கம் பக்கத்திலுள்ள கட்டடங்களில் வசிப்பவர்களுக்கோ தொந்தரவு (nuisance) கொடுக்கும் விதம் நடந்தாலும், செய்தாலும் அவர் அக்கட்டடத்தைக் காலிசெய்ய வேண்டுமென்று கண்ட்ரோலர் உத்தரவிட வேண்டும். கட்டடம், மலைப் பிரதேசங்களல்லாத இடங்களில் இருந்தால், அதன் வாடகைக்காரர் தகுந்த காரணமின்றி, தொடர்ந்த 4 மாதங்களுக்கு அக்கட்டடத்தில் வசிக்காமலிருந்தாலும் (உபயோகிக்காதிருந்தாலும்) அவர் அக் கட்டடத்தைக் காலி செய்யவேண்டுமென்று கண்ட்ரோலர் உத்தரவிட வேண்டும். குடியிருப்பவர், கட்டடக்காரரின் பாத்தியத்தை மறுத்தாலும், தமக்கு அதில் சாசுவதக் குடியிருப்பு பாத்தியம் இருப்பதாகக் கொண்டாடினலும், அவர் சொல்வது உண்மை அல்ல (not bonafide) என்று கண்ட்ரோலருக்குத் தோன்றினலும், அவர் கட்டடத்தைக் காலிசெய்ய வேண்டுமென்று கண்ட்ரோலர் உத்தரவிடவேண்டும்.

(3)(a) ஒரு கட்டடத்தின் சொந்தக்காரர் தம் சொந்த உபயோகத்திற்காக அக்கட்டடம் தேவையாக இருக்கிறன்றதென்றும், குடியிருப்பவர் அதைக் காலிசெய்து கொடுக்கவேண்டுமென்றும் கண்ட்ரோலருக்கு மனுப்போடலாம். ஆனல் அதே ஊரில் தமக்குச் சொந்தமான ஒரு கட்டடத்தில் வசித்துக் கொண்டிருப்பவர் தாம் வசிப்பதற்காக வேறு கட்டடம் (Residential Building) வேண்டுமென்று மனுப் போடமுடியாது. வசிப்பதற்க்கல்லாத கட்டடம் (Non residential Building) தம்சொந்த உபயோகத்திற்கு வேண்டுமென்று கேட்டால், அதே ஊரில் அவர் தமக்குச் சொந்தமான ஒரு கட்டடத்திலோ, ஒரு வாடகைக் கட்டடத்

திலோ, வேறு வகையில் பாத்தியமுள்ள கட்டடத்திலோ தொழில் நடத்துபவராக இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் அவர் தம் சொந்தக் கட்டடத்தைத் தம் சொந்த வியாபாரம் அல்லது தொழில் நடத்துவதற்காக வேண்டுமென்று கேட்கமுடியாது. தவிர ஒரு கட்டடம் வாடகைக்கு விடப்பட்ட பிறகு அதைக் கிரயம் முதலிய எவ்விதப் பத்திரங்களின் மூலம் பாத்தியம் அடையும் ஒருவர் அப்பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் அக்கட்டடம் தம் சொந்த உபயோகத்திற்கு வேண்டுமென்று கேட்கமுடியாது. மேலும் ஒரு தடவை சொந்த உபயோகத்திற்காக இந்த விதியின்படி கட்டடத்தைச் சுவாதீனப்படுத்திக் கொண்டவர் மறுபடியும் அதே வகையான வேறு கட்டடத்தைப் பற்றி மனுப் போடமுடியாது. (b) கட்டடம் ஒரு மதஸ்தாபனத்திற்கோ தர்மஸ்தாபனத்திற்கோ கல்வி அல்லது வேறு பொது ஸ்தாபனத்திற்கோ சொந்தமாக இருந்து வாடகைக்கு விடப்பட்டிருந்தால் அவர்களுக்கு வேறு கட்டடங்கள் இருந்தாலும், தங்கள் சொந்த உபயோகத்திற்காக வாடகைக்கு விடப்பட்ட கட்டடமும் தேவையாக இருக்கிறதென்று கேட்டு மனுப்போடலாம். (c) ஒரு கட்டடத்தின் ஒரு பாகத்தில் அதன் சொந்தக்காரர் இருந்துகொண்டு பாக்கிப் பாகங்களை வாடகைக்கு விட்டிருந்தாலும், அப்படி வாடகைக்கு . விடப்பட்டிருக்கும் பாகமும் தம் சொந்த உபயோகத்திற்கு வேண்டுமென்று கட்டடக்காரர் கேட்டு மனுப் போடலாம். அப்படிக் கேட்பதில் கட்டடக்காரருக் ஏற்படும் சௌகரியத்தைவிட குடியிருப்பவரின் அசௌகரியம்தான் அதிகமென்று கண்ட்ரோலருக்குத் தோன்றினால் அவர் மனுவைத் தள்ளிவிடலாம். (d) குறிப்பிட்ட கெடுவுக்கு ஒரு ஒப்பந்தப்படி வாடகைக்கு விடப்பட்டிருக்கும் கட்டடங்களைச் சொந்த உபயோகத்திற்குத் தேவையாக இருக்கிறதென்றும் அக்கெடுவுக்குள் அதை வாடகைக்காரர் காலி செய்து கொடுக்கவேண்டுமென்றும் கட்டடக்காரர் இந்தப் பிரிவின்படி மனுப்போட முடியாது. (e) இவ்விதம் தம் சொந்த உபயோகத்திற்காக, வாடகைக்காரர் வசமுள்ள கட்டடம் தமக்குத் தேவையாக இருக்கிறதென்று கட்டடக்காரர் உண்மையாகத் தான் (bonafide) கேட்கிறார் என்று கண்ட்ரோலருக்குத் தோன்றினால் அக்கட்டடத்தை வாடகைக்காரர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் காலிசெய்து கட்டடக்காரரிடம் சுவாதீனம் கொடுக்கவேண்டுமென்று கண்ட்ரோலர் உத்தரவிடுவார். அவ்விதம் உத்தரவிட்டால் குடியிருப்பவருக்கு மொத்தம் 3 மாதங்களுக்கு மேற்படாமல் காலி செய்ய அவகாசமும் கொடுக்கலாம்.

(3A) "அத்தியாவசியமான உத்தியோகங்கள்" (Essential Service) என்று இச்சட்டத்திற்காக ராஜ்ய சர்க்காரால் அறிக்கை மூலம் குறிப்பிடப்படும் உத்தியோகங்களில் இருப்பவர்களைக் கட்டடக்காரர், அக்கட்டடம் தம் சொந்த உபயோகத்திற்காக வேண்டுமென்று இவ்விதியின்படி மனுக்கொடுக்க முடியாது. ஆனால் கட்டடக்காரரே அவ்வித உத்தியோகத்தில் அமர்ந்திருந்தால், அவர் மட்டில் இவ்விதியின்படி மனுப் போடலாம். மேலும் கல்வி ஸ்தாபனங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கும் கட்டடங்கள், அவ்விதம் உபயோகப்பட்டு வந்து, சர்க்காராலும், அங்கீகாரம் செய்யப்பட்டுமிருந்தால், அவ்விதக் கட்டடங்களின் சொந்தக்காரர்கள் அக்கட்டடங்கள் தம் சொந்த உபயோகத்திற்குத் .தேவையாக இருக்கிறதென்று கேட்க முடியாது.

(4) தம் சொந்த உபயோகத்திற்காகக் கட்டடம் வேண்டுமென்று மனுப்போட்டு, கட்டடத்தைச் சுவாதீனம் செய்துகொண்ட கட்டடக்காரர் அதிலிருந்து ஒரு மாதத்திற்குள் அக் கட்டடத்திற்கு வராமலும், அல்லது அக்கட்டடத்திற்கு வந்து தாம் சுவாதீனம் செய்து கொண்ட 6 மாதத்திற்குள் தகுந்த காரணமின்றி அக்கட்டடத்தைக் காலி செய்து விட்டாலும், அகற்றப்பட்ட வாடகைக்காரர் ஒரு மாதத்திற்குள் கண்ட்ரோலருக்கு மனுச் செய்து கொண்டால், அக்கட்டடத்தைக் கண்ட்ரோலர் மறுபடி அவர் சுவாதீனத்திலேயே விடும்படி உத்தரவிடுவார்: வாடகைக்காரர் ஒரு மாதத்திற்குள் மனுப் போடாவிட்டால், அக்கட்டடம் சர்க்காருக்கோ சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கோ தேவையாக இருந்தால், அவர்கள் செக்ஷன் 3 படி கட்டடக்காரருக்கு நோட்டீஸ் கொடுத்து அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். ஆனால், மாத வாடகை ரூபாய் 25க்கு மேற்படாத வசிப்பதற்கான கட்டடங்களுக்கும், மாத வாடகை ரூபாய் 50 க்கு மேற்படாத வசிப்பதற்கல்லாத கட்டடங்களுக்கும் இவ்விதி கிடையாது.

(5) தம் சொந்த உபயோகத்திற்குக் கட்டடம் வாடகைக்காரரிடமிருந்து வேண்டுமென்று மனுப் போட்ட கட்டடக்காரர் வேண்டுமென்றும் வாடகைக்காரருக்குத் தொல்லை கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடனும்

அம்மனுப் போட்டதாகக் கண்ட்ரோலருக்குத் தோன்றினல் வாடகைக்காரருக்குக் கட்டடக்காரர் ரூபாய் 50-க்கு மேற்படாத ஒரு தொகையை நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டுமென்று கண்ட்ரோலர் உத்தரவு செய்யலாம்.

(6) இந்தச் செக்ஷனின் உட்பிரிவு (2) அல்லது (3)ல் கண்ட விதிகளின்படி வாடகைக்காரரைக் காலி செய்யும்படி கட்டடக்காரர் கொடுத்த மனு தள்ளப்பட்டால், வாடகைக்காரரின் பாத்தியம் முன் இருந்த ஏற்பாடுகளின்படியே நீடிக்கும். மறுபடியும் இச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்துத்தான் அவரைக் கட்டடத்தை விட்டு அகற்ற முடியும்.

(7) கட்டடக்காரரின் ஏஜண்ட்டாக அக் கட்டடத்தின் வாடகையை வசூல் செய்து வருபவர்கள், கட்டடக்காரரின் எழுத்து மூலமான சம்மதமின்றி, வாடகைக்காரரை அகற்ற மனுப் போட முடியாது.

செக்ஷன் 7-A. நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும் போதே வாடகை கட்டி வரவேண்டும்.

(1) குடியிருப்பவர் கட்டடத்தைக் காலி செய்ய வேண்டுமென்று, கட்டடக்காரர் கண்ட்ரோலரிடம் மனுப்போட்டால், ஜாடா வாடகைப் பாக்கியையும் வாடகைக்காரர், கண்ட்ரோலரிடம் கட்டிவிட்டால்தான் எதிர்க் கட்சி ஆடமுடியும். தொகை கட்டும் தேதி வரை பாக்கியுள்ள ஜாடா வாடகையையும் கட்டி விடவேண்டும். ரெண்ட் கண்ட்ரோலருடைய தீர்ப்பின்பேரில் அப்பீல் செய்வதாக இருந்தாலும், கட்டும் தேதி வரை பாக்கியாகும் ஜாடா வாடகைத் தொகையை அப்பீல் கோர்ட்டில் வாடகைக்காரர் கட்டி விட வேண்டும். மேற்கண்டபடி கட்டவேண்டிய பாக்கி வாடகைகளைக் கட்டடக்காரரிடமும் கொடுத்து விடலாம். நடவடிக்கைகள் முடிவடையும் வரை கடைசியாக எந்த விகிதப்படி வாடகை கொடுக்கப்பட்டு வந்ததோ அல்லது ஒப்புக்கொள்ளப் பட்டதோ, அந்த விகிதப்படி வாடகைத் தொகைகளைக் கட்டிக்கொண்டோ, கட்டடக்காரரிடம் கொடுத்துக்கொண்டோவரவேண்டும்.

(2) வாடகை கட்டும் விஷயமாய் எந்தக் கெடுவுக்குள் கட்டவேண்டுமென்றும், எப்படி கட்டவேண்டுமென்றும் விதிகள் செய்யப்படும். அதற்காக எவ்வளவு படி கட்டவேண்டுமென்றும் விதிகள் ஏற்படும். அதன்படி கட்டவேண்டும்.

(3) வாடகைத் தொகை கட்டவேண்டியது எவ்வளவு என்பதைப் பற்றி, தகராறுகள் ஏற்பட்டால் கட்டடக்காரரோ வாடகைக்காரரோ கண்ட்ரோலரிடம் இதற்காக மனுக் கொடுக்கலாம். அவர் உடனடியாக வாடகை எவ்வளவு கட்ட வேண்டுமென்றே கொடுக்க வேண்டுமென்றே நிர்ணயம் செய்வார்.

(4) முன் சொன்னபடி வாடகைக்காரர் வாடகைத் தொகையைக் கட்டாவிட்டாலும் கட்டடக்காரரிடம் கொடுக்கா விட்டாலும், அதற்குத் தகுந்த காரணங்கள் காண்பிக்கப் பட்டாலொழிய, கண்ட்ரோலரோ, அப்பீல் கோர்ட்டோ, நடவடிக்கையை மேல் நடத்தாமல் நிறுத்துவதுடன், வாடகைக்காரர் கட்டடத்தைக் காலி செய்து, கட்டடக்காரரிடம் சுவாதீனம் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு செய்ய வேண்டும்.

(5) இதன்படி கண்ட்ரோலரிடமோ, அப்பீல் அதிகாரியிடமோ கட்டப்பட்டிருக்கும் வாடகை சம்பந்தமாய் கட்டடக்காரருக்கு விதிகளின்படி நோட்டீஸ் அனுப்பப்படும். விதிகளில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளை அனுசரித்து கட்டடக்காரர் கண்ட்ரோலரிடம் மனுப் போட்டு அத்தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். (தொடரும்)

[**குறிப்பு**. இச்சட்டத்தின் மற்ற செக்ஷன்கள் அடுத்த இதழில் விளக்கப்படும். மற்ற செக்ஷன்களில் புதிய திருத்தச் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாறுதல்கள் சுருக்கமாகப் பின் வருமாறு:—**செக்ஷன் 9.** சென்னைப் பட்டணம் தவிர, மற்ற இடங்களில் கண்ட்ரோலருடைய உத்தரவுகளையும் அப்பீல் கோர்ட்டின் உத்தரவுகளையும் நிறைவேற்ற இனி டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் நிறைவேற்றுமனுக் கொடுக்க வேண்டும். இப்பொழுது சப்கோர்ட் அல்லது ஜில்லா கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கும் நிறை வேற்று மனுக்களையும் முன்சீப் கோர்ட்டுக்கே மாற்றலாம். **செக்ஷன் 12-A** ரெண்ட் கண்ட்ரோலரும் அப்பீல் கோர்ட்டும் செலவு தொகை விதிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. **செக்ஷன் 12 B.** சென்னையில் ஹைகோர்ட்டுக்கும், மற்றஇடங்களில் ஜில்லா கோர்ட்டுக்கும், அப்பீல் கோர்ட்டின் உத்தரவுகளின் பேரிலும் நிறைவேற்று மனுக்களில் ஏற்பட்ட உத்தரவுகளின் பேரிலும் 'ரிவிஷன்' மனுக் கொடுக்கலாம். **செக்ஷன் 12-C.** இச் சட்டப்படி ஏற்பட்ட உத்தரவுகள் சாதாரணமாய் உள்வாடகைக்காரர்களையும் கட்டுப்படுத்தும்.

இவ்விஷயங்களும் சட்டத்தில் பாக்கியுள்ள மற்ற எல்லா செக்ஷன்களும் அடுத்த இதழில் விரிவாக விளக்கப்படும்.]

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

"இவ்வித வழக்குகளை அதிகாரிகள் கோர்ட்டுகளுக்கே கொண்டுவர அவசியமில்லை"—ஜவுளி வியாபாரிகள் கண்ட்ரோல் வழக்கில் உயர் நீதிபதி அவர்களின் அபிப்பிராயம்

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதி: நீதிபதி கனம் சோமசுந்தரம் அவர்கள்.

ஆதாரம்: 64 லா வீக்லி 289.

சென்னை ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவுப்படி (Madras Cloth Dealers Control Order - 1948) மில் ஜவுளியில் சில்லறை வியாபாரம் நடத்த ஒரு வியாபாரிக்கு "லைசென்சு" கொடுக்கப்பட்டிருந்தது. அந்த "லைசென்சில்" பக்கிங்ஹாம் அண்டு கர்னுடிக் மில் ஜவுளிகளை (B and C Mill Cloth) அவர் விற்பனை செய்யக் கூடாதென்று ஒரு ஷரா சேர்க்கப்பட்டிருந்தது. இந்த வியாபாரி 'பி அண்டு ஸி' ஜவுளியையும் விற்பனை செய்ய அனுமதி கேட்டு அதற்காக மனுப் போட்டுமிருந்தார். அனுமதி கிடைப்பதற்குள் அவசரம். 3-3-1949க்குப் பின் 10-3-1949க்குள் இவ்வியாபாரி ஒருவருக்கு முக்கால் கஜமும், மற்றொருவருக்கு இரண்டரை கஜமும் 'பி அண்டு ஸி' மில் ஜவுளியை விற்றதாக இவர்மீது அதிகாரிகள் குற்றம் சாட்டினர். ஆனால் அவ்வியாபாரிக்கு உடனேயே 15-3-1949ல் இவ்வித மில் ஜவுளியையும் விற்பனை செய்ய சர்க்காரிடமிருந்து அனுமதியும் கிடைத்துவிட்டது. இருந்தாலும் அதிகாரிகள் இவர்மீது கிரிமினல் வழக்கு தொடர்ந்தனர். கிரிமினல் கேசில் மாஜிஸ்ட்ரேட்டால் அவ்வியாபாரிக்கு ரூ. 200 அபராதம் விதிக்கப்பட்டது. அத் தீர்ப்பை ரத்துச்செய்ய அவ்வியாபாரி ஹைகோர்ட்டில் பரிசீலனை மனுக்கொடுத்தார். ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி அவர்கள் இவ்வித நிபந்தனையை, அதாவது ஒரு குறிப்பிட்ட மில்லின் ஜவுளியை மட்டில் அவ்வியாபாரி விற்பனை செய்யக் கூடாதென்ற ஷரத்தை "லைசென்சில்" சேர்த்ததுதான் சட்ட விரோதம் என்றும், அவ்விதம் ஒரு நிபந்தனையை "லைசென்சி"ல் சேர்க்க ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவில் யாவருக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றும், சட்ட விரோதமான இந்த நிபந்தனையை மீறுவது குற்றமாகாதென்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, எதிரியின் தண்டனை ரத்துச் செய்யப்பட்டது. இந்த வியாபாரி பக்கிங்ஹாம் மில் ஜவுளியையும் விற்பனை செய்ய அனுமதி கேட்டு, அதுவும் சில தினங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், சட்டத்தின் எழுத்துக்களை மீறிவிட்டார் என்பதைத் தவிர வேறு பெரிய குற்றம் ஒன்றும் நடந்து விடாத இவ்விதமான வழக்குகளை (Cases purely of a technical nature) அதிகாரிகள் கோர்ட்டுகளுக்கே கொண்டுவருவது அவசியமில்லை என்றும், நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

மோட்டார் பஸ் கண்டக்டர் பிரயாணிகளுக்கு டிக்கட் கொடுக்காமலிருந்தால் குற்றமாகுமா?

[அலகாபாத் ஹைகோர்ட்—1951. ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—அலகாபாத்—408. நீதிபதி ஸேம் சேத் அவர்கள்.]

மோட்டார் பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிகளுக்கு டிக்கட் கொடுக்கவில்லை என்றும் அதனுல் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் 'பர்மிட்'டின் ஷரத்துக்களை மீறியதாகவும் மோட்டார் வண்டிச் சட்டத்தின் (Motor Vehicles Act) செக்ஷன் 42/123ன் படி இரண்டு கண்டக்டர்கள் மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டனர். இது தவறு என்று அலகாபாத் ஹைகோர்ட்டால் அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை ரத்துச் செய்யப்பட்டது. அவ்வழக்கில் அம்மோட்டார் காரர்களுக்கு அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட 'பர்மிட்டி'ன் வாசகத்தை உயர் நீதிபதி அவர்கள் பார்த்து அதில் பிரயாணிகளுக்கு கண்டக்டர் டிக்கட் கொடுக்க வேண்டுமென்ற ஷரத்து சேர்க்கப்படவில்லையாகையால், அக்கண்டக்டர்கள் 'பர்மிட்டை' மீறிய குற்றம் செய்யவில்லை என்று அபிப்பிராயப்பட்டனர்.

* * *

ரயிலில் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்வது குற்றமா?

[அலகாபாத் ஹைகோர்ட் - 1951. ஆல் இந்தியா ரிபோர்ட்டர் - அலகாபாத் - 410]

டிக்கட் இல்லாமல் ஒருவர் ரயிலில் பிரயாணம் செய்தார். ரயில்வே அதிகாரிகள் அவர்மீது ரயில்வேச் சட்டத்தின் செக்ஷன் 112இன்படி கிரிமினல் வழக்குத் தொடர்ந்தனர். பிராதில் சொல்லப்பட்டிருந்தது இது தான்—"எதிரி டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்தார்-ரயிலுக்குக் கொடுக்க வேண்டிய டிக்கட் கட்டணத்தைக் கொடுக்கவும் மறுத்தார்" என்று மட்டில் தான் குறிப்பிடப்பட்டிருந்தது. ரயில்வே வழக்குகளுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் விசேஷ மாஜிஸ்ட்ரேட்டால் இவர் குற்றவாளியாகக் கருதப்பட்டு தண்டிக்கப்பட்டார். இவ்வழக்கின் விவரங்களைப் பரிசீலனை செய்த அலகாபாத் ஹைகோர்ட்டார் இத்தண்டனையை ரத்துச் செய்தனர். ரயில்வேச் சட்டத்தின் 112 ஆவது செக்ஷனில் "டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்வது" ஓர் குற்றமாக்கப்படவில்லை என்றும்; அதில்—"ரயில்வே நிர்வாகத்தை ஏமாற்றவேண்டுமென்ற எண்ணத்துடன், டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்வது" தான் குற்றமாக்கப்பட்டிருக்கிறதென்றும்; ரயில்வே அதிகாரிகள் கொடுத்த பிராதிலேயே இவ்வித எண்ணம் எதிரிக்கு இருந்ததாகச் சொல்லப்படாத நிலையில், அப்பிராதைக் கையில் வாங்கியவுடனேயே "எதிரி ஒன்றும் குற்றம் செய்யவில்லை" என்று பிராதை உடனடியாகவே மாஜிஸ்ட்ரேட் தள்ளி இருக்கவேண்டுமென்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். கெட்ட எண்ணம் ஒன்றுமில்லாவிட்டாலும் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்வதால் ஒருவர் ரயில்வே நிர்வாகத்திற்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்காவிட்டால் அதை வசூல் செய்வதற்காக மாஜிஸ்ட்ரேட்டிடம் ரயில்வே நிர்வாகிகள் ரயில்வேச் சட்டத்தின் செக்ஷன் 113ன்படி மனுப் போடலாமே ஒழிய அதன்படி அவர்கள் "கிரிமினல் கம்ப்ளெயின்ட்" கொடுக்க முடியாதென்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 5-தேதிக்குள் உங்களிடம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும்.

ஏஜண்டுகள் மூலம் "வக்கீல்" வாங்கி வரும் இந்தியாவிலிருக்கும் நேயர்களுக்கும் 5-தேதிக்குள் "வக்கீல்" கிடைக்காவிட்டால் ஆபீசுக்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்விகளுக்கு நேரில் பதில் கிடைக்க: "வக்கீல்" பத்திரிகையில் மேற்கண்டபடி வரிசைக் கிரமமாய்ப் பதில் வெளிவரும் முன்பே பிரத்தியேகமாகத் தபால் மூலம் நேராகப் பதில் கேட்கும் நேயர்கள் கேள்வி அடங்கிய தாளை **ரிஜிஸ்டர் தபால் மூலம்** காரியாலயத்திற்கு அனுப்புவதுடன் அத்துடன் தமது விலாசம் எழுதப்பட்ட கவர் ஒன்றும், **ரூபாய் மூன்று** தபால் ஸ்டாம்பும் சேர்த்து அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனி ஸ்டாம்பு அனுப்பவேண்டும். பிரத்தியேக பதில் அனுப்பப்படும்.

57. கேள்வி: ஒருவர் சிறைத் தண்டனை அடைந்து சிறைவாசம் செய்யும் போது தமக்கு வரவேண்டிய லேவாதேவி தஸ்தாவேஜுகள் காலாவதியாகப் போய்விட்டால், அவர் சிறையிலிருந்து வெளிவந்த பின், அத் தொகைகளை வசூல் செய்ய முடியுமா?

பதில்: முடியாது.

58. கேள்வி: (கணேசன்) தபால் மூலம் அனுப்பும் மணியார்டர் தொகை அனுப்பப்பட்டவர் வசம் சேராமலும் அனுப்பியவர் வசம் திருப்பி வராமலும் இருந்தால், யார்மீது எந்தக் கோர்ட்டில் தாவா செய்வது?

பதில்: மணியார்டர் அனுப்பப்பட்ட ஒரு வருடத்திற்குள் சர்க்காருக்குத் தபால் (Postal) இலாகாவுக்கு பணம் அனுப்பியவரோ அல்லது பணம் பெற்றுக்கொள்ள வேண்டியவரோ மனுப் போடவேண்டும் (போஸ்டாபீஸ் ஆக்ட்-செக்ஷன் 44.) அல்லது பணம் தவறுதலாக வேறு ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், மணியார்டர் அனுப்பப்பட்ட ஒரு வருடத்திற்குள் கோர்ட்டில் சர்க்கார் மீதும் தாவா செய்யலாம். சர்க்கார் மீது தாவா செய்யுமுன் சட்டப்படி கொடுக்கப்பட வேண்டிய நோட்டீசைக் கொடுத்து, பணம் அனுப்பிய இடத்திற்கான கோர்ட்டிலோ, பணம் கொடுக்கப்பட வேண்டிய இடத்திற்கான கோர்ட்டிலோ தாவா செய்யலாம். தவறான விலாசத்தைக் கொடுத்து விட்டு அதனால் பணம் மாறுதலாக வேறு ஒருவருக்குக் கொடுக்கப்பட்டுவிட்டால், சர்க்கார்மீது தாவா செய்ய முடியாது. ஆனால் தவறுதலாகப் பணத்தை வாங்கிக்கொண்டவரிடம் போஸ்டாபீசு அதிகாரிகளே வசூலித்துக் கொடுப்பார்கள். இதற்குப் போஸ்டாபீசு சட்டத்தில் அவர்களுக்கு அதிகாரமிருக்கிறது.

59. கேள்வி: (மாணிக்கம் செட்டியார்-ரேமங்கலம்) நூறு ரூபாய்க்குட்பட்ட ஒரு ஒத்தி தஸ்தவேஜு எழுதி, ரிஜிஸ்டராகாமலிருந்து, புதிய ஒத்திச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பே 60 வருடங்களுக்கு மேலானால், அது கிரய பாத்தியமாகுமா?

பதில்: மீட்கும் பாத்தியம் காலாவதியால் பாதிக்கப்பட்டு விட்டபடியால் ஒத்திதாரே

சொத்துக்குச் சொந்தக்காரராகி விடுவார்.

60. கேள்வி: (கோபாலன்) ஓர் ஹையர் கிரேடு ஆசிரியருக்கு (இந்து) விவாகமாகி மனைவியும், ஒரு ஆண் குழந்தையும் இருக்கின்றனர். அவர் அம் மனைவியின் அனுமதியின் பேரில் மறுபடியும் ஓர் ஆசிரியையை மணந்து கொள்ளலாமா?

பதில்: ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும், மற்ற இந்தியப் பிரஜைகளுக்குள்ள சட்ட திட்டங்கள் உண்டு. இந்து பலதாரத் தடைச் சட்டத்திற்கு விரோதமாக அதாவது அவர், முதல் மனைவியின் விவாகத்தைக் கோர்ட் மூலம் ரத்து செய்துகொள்ளாமல் ஓர் ஆசிரியையை மணந்துகொண்டாலும் வேறு யாரை மணந்துகொண்டாலும் குற்றம்தான். இரண்டாவது மணமும் செல்லாது. முதல் மனைவியின் அனுமதி போதாது.

61. கேள்வி: (ஷ) சாரதா சட்டத்தை மீறி, ஒருவன் முதல் மனைவியிருக்கும் போது மறு விவாகம் செய்து கொண்டால், மனைவிதான் நடவடிக்கை எடுக்கவேண்டுமா? சர்க்காரே நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

பதில்: 'சாரதா சட்டம்' என்பது பாலிய விவாகத் தடைச்சட்டம். அதாவது ஆணுக்கு 18 வயது பூர்த்தி ஆகாமலும் பெண்ணுக்கு 15 வயது பூர்த்தி ஆகாமலும் இருக்கும் போது மணம் செய்து கொள்வதைக் குற்றமாக்கும் சட்டம். இது இந்தியாவிலுள்ள இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் முதலிய யாவருக்கும் உள்ள (மத்திய) சட்டம்.

ஒரு மனைவி உயிருடன் இருக்கும்போது இரண்டாவது மணம் செய்து கொள்வதைத் தடுப்பது சென்னை இந்து பலதாரத்தடை விவாகரத்துச் சட்டம். இது சென்னை இந்துக்களுக்கு மட்டில் உள்ள சட்டம். கேள்வியிலிருக்கும் மணமகன் சென்னை இந்துவாக இருந்து இவ்விரு சட்டங்களையும் மீறினால்—அதாவது ஒரு மனைவி உயிருடன் இருக்கும்போது, அவர் 15 வயதுக்குட்பட்ட வேறு ஒரு பெண்ணை இரண்டாவது கலியாணமாகச் செய்து கொண்டால்—இரண்டு சட்டங்களின் படிக்கும் குற்றம் செய்பவராவார். சாரதா சட்டம் மீறப்பட்டதற்கு எவரும் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் பலதாரத் தடைச்சட்டம் மீறப்பட்டதற்கு இரண்டாவது மணத்தால் துன்பமடைந்த முதல் மனைவி (அல்லது இரண்டாவது மனைவியும் ஏமாற்றப்பட்டிருந்தால் அவளும்) தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

62. கேள்வி: (கந்தசாமி — புள்ளமங்கலம்) தேங்காய் வியாபாரி, கிரயத்திற்கு வாங்கி, தேங்காய் விற்றுவும் சொந்தத் தேங்காய்களையும் குத்தகைக் காய்களை விற்றுவும் ரூ. 7500-குட்பட்ட தொகைக்கு லைசென்சு வாங்கவேண்டுமா?

பதில்: "லைசென்சு" என்ற வார்த்தை சரி அல்ல. ஒரு வருடத்தில் ரூபாய் 7500-க்கு குறையாமல் மொத்த வியாபாரம் செய்யும் வியாபாரிகள் கட்டாயமாகத் தங்களைப் பதிவு "ரிஜிஸ்டர்" செய்து கொள்ள வேண்டும். அதற்குக் குறைவாக வியாபாரம் செய்பவர்கள் "ரிஜிஸ்டர்" செய்துகொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனால் இஷ்டப்பட்டால் செய்து கொள்ளலாம். சொந்த நிலத்திலும் குத்தகை நிலத்திலும் கிடைக்கும் தேங்காயை விற்பனை செய்யும் தொகைகளை, "மொத்த வியாபாரத் தொகை"யில் சேர்த்துக்கொள்ள வேண்டியதில்லை.

63. கேள்வி: (ராமானுஜம் — திருச்சி) கைத்தறி ஜவுளிக்கு விற்பனை வரி ரூபாய் 1-க்கு ஒன்றரை தம்படியாக 15-2-1951 முதல் குறைக்கப்பட்டிருப்பதால், மில் ஜவுளியும், கைத்தறி ஜவுளியும் சேர்த்து விற்பனை செய்யும் வியாபாரிகள், (இரண்டும் கலந்து விற்பனை செய்து வருவதால்) பூரா விற்பனைக்கும் காலணா வீதம் செலுத்த வேண்டுமா? அல்லது கைத்தறி ஜவுளி விற்பனைக்கு மட்டில் $1\frac{1}{2}$ தம்படி வீதம் கட்டினால் போதுமா? கைத்தறி ஜவுளி விற்பனைக்கும் மில் ஜவுளி விற்பனைக்கும் தனித் தனி பில் போட்டே விற்கப்பட்டு வருகிறது.

பதில்: கைத்தறி ஜவுளி விற்பனைக்குப் பிரத்தியேகமான கணக்கு வைத்துக்கொண்டிருந்தால் அதற்கு $1\frac{1}{2}$ தம்படி வீதம் வரி செலுத்தலாம். மில் ஜவுளி வியாபாரமும் சேர்த்துச் செய்வதால் பாதகமில்லை.

கண்ட்ரோல்

சென்னை ரைஸ் மில் லைசென்சு உத்தரவு (1951)

[Madras Rice Mills Licensing order 1951. அமுலுக்கு வந்த தேதி: 19-4-1951. சென்னைச் சர்க்கார் கெஜட் 24-4-1951. ரூல் சப்ளிமென்ட் பாகம் II பக்கம் 78 ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.]

1947 ஆம் வருடத்திய ரைஸ் மில் லைசென்சு உத்தரவு ரத்துசெய்யப்பட்டு அதற்குப் பதிலாக சென்னைச் சர்க்காரால் இப்புது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது சென்னை ராஜ்யம் முழுவதிலும் அமுலில் இருக்கும். 19-4-1951 தேதியிலிருந்து அமுலுக்கு வந்து விட்டது. இதன் முக்கிய ஷரத்துக்கள்:— ஜில்லா கலெக்டரிடம் லைசென்சு பெற்றுக்கொண்டுதான் எவரும் விசையந்திரத்தின் உதவியால் (Power driven machinery) நெல் அரிசி அரைக்கலாம். லைசென்சில் கண்ட நிபந்தனைகளின் படியே அரைக்கவேண்டும் லைசென்சுக்கு மனு நமூனா I ன்படி இருக்கவேண்டும். நமூனா II ன் படி லைசென்சு கொடுக்கப்படும். லைசென்சுக்காகப் போடும் மனுவில் எஞ்ஜின் மேக், சக்தி (ஹார்ஸ் பவர்) அரைவைக்கல்லின் நீளம், ஹல்லர் மேக் எண்ணிக்கை போன்ற யந்திர சம்பந்தமான பல விவரங்கள் நமூனா I ன் படி சொல்லப்படவேண்டும்.

லைசென்சு பெற்ற ரைஸ் மில் நடத்துபவர் புதிய ஹல்லர்களையோ, புதிய யந்திர சாதனைகளையோ ஜில்லா கலெக்டருடைய (பர்மிட்) அனுமதியின்றி, சேர்த்துக் கொள்ளக்கூடாது. ஜில்லா கலெக்டர்களும் இது சம்பந்தமாக, ராஜ்ய சர்க்காரால் தேவையான சமயங்களில் பிறப்பிக்கும் பொது அல்லது குறிப்பிட்ட உத்தரவுகளின்படிதான் பர்மிட் வழங்க வேண்டும். பழைய உத்தரவின்படி வழங்கப்பட்ட லைசென்சுகள் 31-3-1951 வரைதான் செல்லும். பிறகு ஒவ்வொரு வருடமும் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். வருடம் என்பது ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல் அடுத்த மார்ச்சு மாதம் 31-ம் தேதி முடிய உள்ள ஒரு வருடம் என்று அர்த்தம். லைசென்சு எந்தத் தேதியில் கொடுக்கப்பட்டாலும் அடுத்து வரும் மார்ச்சு மாதம் 31-ஆம் தேதியோடு முடிந்து விடும். மறுபடி புதுப்பித்துக்கொள்ளவேண்டும். லைசென்சு வாங்கவும், புதுப்பித்துக் கொள்ளவும் கட்டணம் ரூ. 24. குறிப்பிட்ட நபர்களுக்கும், குறிப்பிட்ட வகையைச் சேர்ந்தவர்களுக்கும் லைசென்சுக் கட்டணம் வேண்டியதில்லை என்று விதிவிலக்கு அளிக்க, ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. லைசென்சுக் கட்டணத்தைச் சர்க்கார் கஜானாவில் கட்டி மனுவுடன் ரசீதையும் அனுப்பவேண்டும். லைசென்சில் கண்ட நிபந்தனைகளை மீறினால் வேறு நடவடிக்கை எடுப்பது தவிர லைசென்சும் ரத்துச் செய்யப்படலாம். ஒவ்வொரு ரைஸ் மில்காரரும் ஜில்லா கலெக்டர் அல்லது அவரிடம் அதிகாரம் பெற்ற அதிகாரியால் குறிப்பிடப்படும் கணக்குகளை வைத்துக் கொள்ளவேண்டும்.

ரைஸ்மில்காரர்கள் ஜாமீன் கட்ட வேண்டும்:—ஒவ்வொரு ரைஸ்மில்காரரையும் ஓர் குறிப்பிட்ட தொகையை ஜாமீனாகக் கட்டும்படி ஜில்லா கலெக்டர் உத்தரவிடுவார். இக்கட்டுப்பாடு உத்தரவின் ஷரத்துக்கள் மீறப்பட்டாலும், லைசென்சில் கண்ட நிபந்தனைகள் மீறப்பட்டாலும் வேறு நடவடிக்கைகள் எடுப்பது தவிர இந்த ஜாமீன் தொகை ஜாடாவையுமோ அல்லது அதன் ஒரு பாகத்தையோ சர்க்காருக்குப் பறிமுதல் செய்ய ஜில்லா கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ரைஸ்மில் நடத்தப்படும் இடங்களுக்குப் போய் சோதனை செய்ய எந்த உத்தியோகஸ்தருக்கும் சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனரோ, ஜில்லா கலெக்டரோ, அதிகாரம் கொடுக்கலாம். நெல் அல்லது அரிசி அரவை சம்பந்தமாயும், யந்திரங்கள் பழுது பார்க்கும் விஷயமாகவும் எவ்விதமான தாக்கீது அனுப்பவும் ஜில்லா கலெக்டருக்கும் அவரிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தருக்கும் அதிகாரம் உண்டு. அதன்படி நடக்க வேண்டியது ரைஸ்மில் காரரின் கடமையாகும். முன் எச்சரிக்கை அல்லது காரணம் இல்லாமலே எந்த லைசென்சையும் ரத்துச்செய்ய விசேஷ சந்தர்ப்பங்களில் ராஜ்ய சர்க்காருக்கும் அதிகாரம் உண்டு.

லைசென்சு பெற்றவரோ, அவருடைய ஏஜண்டோ காரியஸ்தரோ, சிப்பந்திகளோ இக்கட்டுப்பாடு உத்தரவையோ லைசென்சின் நிபந்தனைகளையோ மீறினல் அக்குற்றத்திற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதற்காக விதிக்கப்படும் தண்டனை தவிர சம்பந்தப்பட்ட நெல் அரிசி சாக்கு முதலிய சாமான்களும் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்பட வேண்டு மென்று உத்தரவிடக் கோர்ட்டுக்கு அதிகார முண்டு.

ஜில்லா கலெக்டருடைய அனுமதியின்றி, இக்கட்டுப்பாடு உத்தரவை மீறியதாக எவர் மீதும் வழக்குத் தொடர முடியாது. நமூனு I என்பது லைசென்சுக்குப் போடவேண்டிய மனு. நமூனு II என்பது லைசென்சின் வாசகம். நமூனு III என்பது ரைஸ்மில் லைசென்சு பெற்றவர்கள் ஒவ்வொரு மாதமும் கலெக்டருக்கு அனுப்ப வேண்டிய (ரிடர்ன்) கணக்கு விபரங்கள்.

கட்டடவேலைக்கான இரும்பு எஃகுக் கட்டுப்பாடு உத்தரவு (1951)

சென்னைச் சர்க்காரால் இப்புதுக் கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது சென்னை ராஜ்யம் முழுவதும் அமுலில் இருக்கும். இவ்வுத்தரவு 1-5-1951ல் அமுலுக்கு வந்தது. இக்கட்டுப்பாடு உத்தரவுப்படி கட்டடங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது (1) ஆடம்பரக் கட்டடங்கள் (Luxurious Building) என்றும், (2) சாதாரணக்கட்டடங்கள் என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆடம்பரக்கட்டடங்கள் என்றால், சினிமா, நாட்டியக் கொட்டகை, டிராமாக் கொட்டகை, வேறு உல்லாசமாகப் போது போக்குவதற்கான இடங்கள் இவைகளையும், வாசம் செய்வதற்கான கட்டடங்களாக இருந்தால் அதன் கட்டட விஸ்தீர்ணம் (Plinth area) 3000 சதுர அடிக்கு மேலோ அல்லது தரை விஸ்தீர்ணம் 6000 சதுர அடிக்குமேலோ உள்ள கட்டடங்களையும், வசிப்பதற்கல்லாத கட்டடங்களானால் கட்டட விஸ்தீர்ணம் 5000 சதுர அடிக்கு மேலும் அல்லது தரை விஸ்தீர்ணம் 10,000 சதுர அடிக்குமேலும் உள்ள கட்டடங்களையும் குறிக்கும். ஆடம்பரக் கட்டடங்களுக்காகக் கட்டுப் படுத்தப்பட்ட இரும்பு அல்லது எஃகுச் சாமான்களை வாங்கவும் உபயோகிக்கவும் கண்ட்ரோலருடைய 'பர்மிட்' வேண்டும். பர்மிட்டில் கண்ட நிபந்தனைகளின் படிதான் அவைகளை வாங்கவும் உபயோகிக்கவும் முடியும். இதற்கு மாருக ஒருவரும் இரும்பு எஃகுச் சாமான்களை வாங்குவதும் உபயோகிப்பதும் குற்றமாக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கட்டடங்களுக்காகவும் கண்ட்ரோலருடைய பர்மிட்டின் மீது வாங்கப்பட்ட இரும்பு, எஃகுச் சாமான்களையோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியிடம் (approved dealer) வாங்கிய இரும்பு எஃகுச் சாமான்களையோதான் உபயோகிக்கலாம். இதற்குமாருக வாங்கப்பட்ட கண்ட்ரோல் சாமான்களைக் கட்டடங்களில் உபயோகிப்பது கூடக் குற்றமாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சாதாரணக் கட்டடங்களில், ஆணி, ஸ்குரு, போல்ட், நட், கதவுகளுக்கும் ஜன்னல் முதலியவைகளுக்கும் ரிவட் இவைகளை உபயோகப்படுத்துவதையும், கட்டுப்படுத்தப்பட்ட இரும்பு அல்லது எஃகைக் கதவுகள், ஜன்னல்கள், பாசனிங் இவைகளுக்கு உபயோகிப்பதையும் இவ்விதி பாதிக்காது. இக்கட்டுப்பாடு உத்தரவு சில கட்டடங்களுக்குக் கிடையாது. அவையாவன:— கல்வி, வைத்தியம், மதம், தர்மம் இவை சம்பந்தமாகவும், பொதுச்சுகாதாரத்தை விருத்தி செய்யவும் அல்லது பொருளாதார சௌக்கியங்களை விருத்தி செய்யவும் பொது ஜனங்கள் கட்டும் கட்டடங்கள்; சர்க்கார் அல்லது ஸ்தல ஸ்தாபனங்கள் கட்டும் கட்டடங்கள்; அல்லது அவர்கள் ஓர் பகுதி செலவு செய்து கட்டும் கட்டடங்கள்; மத்தியசர்க்காரிடம் அலாட்மெண்ட் பெற்று கட்டும் கட்டடங்கள் அல்லது மத்தியசர்க்காரின் அனுமதி பெற்ற கட்டடங்கள்—இவைகளுக்கு இக்கட்டுப்பாடு உத்தரவு கிடையாது. இச்சட்டத்தை அமுல் நடத்த அதிகாரிகள் எந்த இடங்களிலும் நுழைந்து சோதனை செய்து, இக்கட்டுப்பாடு உத்தரவுக்கு மாருக வாங்கப்பட்டு அல்லது உபயோகப்பட்டிருக்கும் இரும்பு அல்லது எஃகுச் சாமான்களைக் கைப்பற்றவும் அதிகாரமுண்டு. கோர்ட்டும், இக்கட்டுப்பாடு உத்தரவை மீறியவருக்கு விதிக்கும் தண்டனையைத்தவிர, அச்சாமான்களையும் சர்க்காருக்குப் பறிமுதல் செய்யலாம்.

(1—5—1951-சென்னைச் சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் II பக்கம் 83)

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்

பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை.
ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M, N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—

தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர்: வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ
தெப்பக்குளம் P. O., திருச்சி

Regd. No. M. 5399

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் 'கோகுல்'

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED TRADE MARK

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம், கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காங்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள் பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris
B. BALAPATTABI CHETTIAR,
246. VYSYAL STREET. COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUBUVANAM, TDR.